# அரசு ஊழியர்

2022 மார்ச் மலர்:43 இதழ்:03

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர் : **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:

**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

இதழ் வடிவமைப்பு:

**ஆர்.காளத்தி** *9677003178*

ஆண்டுச் சந்தா : ரூ.100

தனி இதழ் : ரூ.10

**முகவரி:** பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:** சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை-600002


## சூடா ஒரு கோப்பை சூப்

நாளை காலை
மெழுகுவர்த்தி ஒளி
மங்குவது போல் நானும்
மறைந்து விடுவேன்.
ஆனால்,
நம்முடைய நம்பிக்கைகள்,
குறிக்கோள்கள் இந்த உலகத்தை
பிரகாசிக்கச் செய்யும்.
மீண்டும் பிறப்போம்,
எண்ணற்ற இந்நாட்டு
வீரர்களின் உருவில் - *பகத்சிங்*

தலைவர் மடல்

# அகில இந்திய வேலை நிறுத்தம் என்பது வெற்று முழக்கமல்ல

இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயரின் புதிய விவசாயக் கொள்கையால் ஜமீன்தாரர்கள், ஆங்கில பிரதிநிதிகள். வட்டிக் கடைக்காரர்கள் ஆங்கில அதிகார வர்க்கத்தின் ஆதரவோடு சுரண்டலில் ஈடுபட்டவர்களை நாடெங்கும் பழங்குடிமக்களும், விவசாயிகளும் எதிர்த்து கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். 1855-56ல் சந்தால்இனமக்களின் (தற்போதய ஜார்கன்ட் மாநிலம்) நிலங்கள் பறிக்கப்பட்டபோது நிலச்சுவான்தாரர்கள், ஈட்டிக் கடைக்காரர், வியாபாரிகளுக்கு எதிராகவும் இவர்களுக்கு ஆதரவாக இருந்த வெள்ளையனை எதிர்த்தும் கிளர்ச்சி செய்தனர், 1859-60ல் வங்காளத்தில் அவுரி விவசாயிகள் ஆங்கிலேய தோட்டச் சொந்தக்காரர்களால் சொல்லொனா துயருக்கு ஆளானபோது பஸரத் என்ற இடத்தில் ஆங்கிலேயனுக்கு எதிராக வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினர். விவசாயிகளின் சொத்துக்களை சட்டவிரோதமாக எடுத்துக்கொண்டதால் வங்காளத்தில் 1872ல் பாப்னா, போக்ரா ஆகிய இடங்களில் நிலச்சுவான்தாரர்களின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், அவர்களுக்கு ஆதரவாக இருந்த ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும் கிளர்ச்சி செய்தனர். 1875 ல் மராட்டியவிவசாயிகள், மலபாரில் மாப்ளா விவசாயிகள், அஸ்ஸாம் விவசாயிகள் கிளர்ச்சி என போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இந்தியாவில் வேலையின்மை, பொருளாதார சீர்குலைவு, சிப்பாய்கள் கிளர்ச்சி காரணமாக 1857ல் நடைபெற்ற விடுதலைப் போராட்டம் உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. மக்கள் போர் வீரர்களாக மாறி தேசியத்தலைவர்கள் படையில் சேர்ந்தனர். இதனால் கிழக்கிந்திய கம்பெனி ஆதிக்கத்தின் கீழ் இருந்த இந்திய நிர்வாகம் பிரிட்டிஷ் மன்னராட்சியின் கீழ்வந்தது. ஆங்கிலேய அதிகாரிகள் தாங்கள் இந்தியாவில்

கொள்ளையடித்தப் பணத்தையே மீண்டும் தொழிற்துறையில் முதலீடு செய்தனர். இதன்காரணமாக இந்தியாவில் நவீனதொழில்கள் தொடங்கப்பட்டது. ரயில்பாதை இரும்பாலை, நிலக்கரிசுரங்கம், சணல் ஆலைகள், தேயிலை தோட்டங்கள், நூற்பாலைகள் ஆகிய நவீன தொழில்கள் தோன்றியபோது தொழில் விதிமுறைகள் ஏதும் இல்லாத காலத்தில் குறைந்தகூலி அதிக நேர வேலை, மாசு, சூழல் என தங்கள் குறைகளை வெளிபடுத்த முடியாத நிலையிருந்தது. இந்திய தொழில்கள் பணமுதலைகளின் வசமும் அவர்களுக்கு ஆதராவாக இருந்த ஆங்கிலேயர் வசமும் இருந்ததால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் விடுதலை இயக்கத்தினை நடத்தினர். தொழிலாளர்கள் நலனைகாக்க தொழிற்சங்க இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. தொழிற்சங்க இயக்கங்கள் இரு குறிக்கோள்களை கொண்டு இயங்கியது ஒன்று தொழிலாளர் நலன்களை காக்கும் அமைப்பாகவும், மற்றொன்று கொள்கை அடிப்படையில் முதலாளித்துவத்திற்கு ஆதரவாக இருக்கும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்ப்பது. தொழிலாளர்களின் தொடர் போராட்டங்கள் காரணமாக 1881 ல் இந்திய ஆலைவிதிகள் உருவாக்கப்பட்டது. இவ்வாறு தொழிலாளர் நலன்களை பாதுகாக்க பன்னெடுங்காலமாக படிப்படியாக உருவாக்கப்பட்ட 44 தொகுப்புச் சட்டங்களை 4 தொகுப்பு சட்டங்களாக திருத்தியமைக்க உத்தேசித்துள்ளது ஒன்றிய மோடி அரசு. இதனால் தொழிலாளர்களின் ஊதியம், பணிப் பாதுகாப்பு, சமூகபாதுகாப்பு, சுகாதாரம், மற்றும் தொழிலாளர் மேம்பாடு என தொழிலாளர்கள் உரிமைகளை பாதிக்க கூடியதாக இச்சட்டத் திருத்தம் உள்ளது.

ஒன்றிய மோடிஅரசு கருப்புப் பணத்தை ஒழிப்பதாக கூறி ஓர் இரவில் 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என, அறிவித்த பணமதிப்பிழப்பும், அதனைத் தொடர்ந்து ஒரேநாடு ஒரேவரி என்று சரக்கு மற்றும் சேவைவரி அறிவித்து மாநிலங்களின் நிதியை பறித்துக் கொண்டது. இதனால் 40 ஆண்டுகளில் இல்லாத பெரும் வீழ்ச்சியாக 2020-2021 நாட்டின் ஜிடிபி 7.3% ஆக சரிந்துள்ளது. ஜி.எஸ்.டி மூலம் மாநிலங்களிடமிருந்து வரிவிதிப்பு உரிமை பறிக்கப்பட்டப் பின்பு, மாநிலங்களுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகையை வழங்காமல் இழுத்தடிக்கிறது. தமிழ்நாட்டிற்கு மட்டுமே 20,000 கோடிகள் ஒன்றிய அரசு தரவேண்டுமென தமிழ்நாடு நிதியமைச்சகம் வெள்ளை அறிக்கை வெளியிட்டுள்ளது. மாநிலங்களுக்கு சேரவேண்டிய பங்கை வழங்காமல் தனியாருக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட பாடுபடுகிறது. சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பால் சிறுகுறு தொழில் நிறுவனங்கள் முதல் பெரிய தொழில் நிறுவனங்கள் அனைத்தும் நஷ்டமடைந்ததும், பொருளாதார மந்தநிலையால் மக்களிடம் நுகர்வுத் திறன் குறைந்ததும், உற்பத்தி சாதனங்கள் விலை போகாததால் தொழிற்சாலைகள் முடக்கம் காரணமாக பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணியிழந்து வாழ்வாதாரம் இழந்து தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டது. ஊரடங்கு காலத்துக்கு முன் சம்பள வேலை பார்த்துக் கொண்டிருந்த பாதிக்கு மேற்பட்டோரால் தற்போது தங்கள் வேலையை தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை என்று பொருளாதார நிபுணர் அமித்பசோல் கூறுகிறார். இந்தியர்கள் வேலையில்லாப் பிரச்சினையை மிகப்பெரிய பிரச்சினையாக கருதுகிறார்கள் என்றும் சுமார் 18.06 மில்லியன் இந்தியர்கள் வேலையின்றி உள்ளனர் என்றும், 393.7 மில்லியன் பேர் புலம்பெயர் தொழிலாளர்களாக பாதிக்கக் கூடிய நிரந்தரமற்ற வேலைகளை செய்கிறார்கள் என்று பியூ ஆராய்ச்சி மைய அறிக்கை கூறுகிறது. ஏழை எளிய மக்கள், ஊழியர்கள் மற்றும் சிறு வியாபாரி நலன்களில் சிறிதும் அக்கரையற்ற கொள்கைகளை இந்த ஒன்றிய அரசு வகுத்து வருகிறது.

கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டு முதல் அலையில் முன்னெச்சரிக்கை விடுக்காமல் திடீரென ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு போக்குவரத்தை முடக்கியதால் நாட்டின் பலபகுதிகளில் வேலைசெய்து வந்தபுலம் பெயர் தொழிலாளர்கள் தங்களது மனைவி குழந்தைகளுடன் பாத்திர பண்டங்களை சுமந்து கொண்டு பலநூறு மீட்டர் நடந்தே சென்றது நாட்டின் மிகப் பெரிய சோகமான நிகழ்வாக இருந்தது. பலநூறு கிலோமீட்டர் பசியிலும் தாகத்தாலும் உடல் சோர்வாலும் உயிரிழந்தவர்கள் ஏராளமானோர். அவுராங்காபாத்திலிருந்து

மத்திய பிரதேசம் நடந்து சென்ற தொழிலாளர்கள் சோர்வினால் தண்டவாளத்தில் உறங்கும்போது அவர்கள் மீது சரக்குரயில் மோதி 17 பேர் உடல்துண்டு துண்டாகி பலியாகினார்கள். இந்தியாவின் அனைத்து சாலையெங்கும் புலம்பெயர் தொழிலாளர்கள் நடந்து நடந்து தேய்ந்து போன பாதங்களில் வடிந்த இரத்தகோடுகளால் பலசோக சம்பவங்கள் நடந்தேறியுள்ளது.

கொரோனா இரண்டாம் அலையின் வீரியம் குறித்து மக்களுக்கு முன்னெச்சரிக்கை விடுக்காததால் அதிக தொற்று ஏற்பட்டதும், ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் ஆயிரக்கணக்கான அப்பாவிமக்கள் சுவாசத்திற்காக போராடி உயிரிழந்ததும், நம் உயிருக்குயிரான சொந்தபந்தங்களையும் ,சுற்றத்தாரையும், நண்பர்களையும் இழந்துக் கொண்டும் நம் உயிரைகாப்பாற்றிக் கொள்ளவும், ஏழை எளியவர்கள் ஒருவேளை உணவுக்காக தத்தளித்துக் கொண்டிருக்கும் வேளையில்தான், அமெரிக்காவின் "போர்ப்ஸ்" வணிகப் பத்திரிக்கை 2021 ஆம் ஆண்டுக்கான பணக்காரர்கள் பட்டியலை வெளியிட்டது. அதன் தகவல்படி மூன்று இந்தியர்கள் மட்டும் 100 பில்லியன் டாலர்கள் சொத்து சேர்த்துள்ளதாகவும், 2020ல் இந்திய பில்லியனர்கள் எண்ணிக்கை 102 ஆக இருந்ததாகவும் 2021ல் 140 ஆக அதிகரித்துள்ளதாகவும், அவர்களின் மொத்த செல்வம் 596 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்று காலத்தில் ஒருபுறம் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து ஒருவேலை சோற்றுக்காக பிழைப்பைத் தேடிக்கொண்டிருக்கும் வறியவர்கள்மேலும் மேலும் வறியவர்களாகி கொண்டிருக்க, மறுபுறம் நாட்டின் மொத்த செல்வமும் வெறும் 10%சதம் மக்களிடம் குவிந்து காணப்படுகிறது. இந்நாட்டின் ஏழை மற்றும் பணக்கார வர்க்கங்களின் முரண்பாடான நிலையை காணும்போது

"நெஞ்சுப் பொறுக்கு தில்லையே - இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்கு தில்லையே
கஞ்சி குடிப்பதற் கிலார் - அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோபஞ்சமென்றே - நிதம்
பரிதவித் தேஉயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றாரே- இவர்
துயர்களை தீர்க்கவோர் வழியிலையே"

என்கின்ற மகாகவி பாரதியின் பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

நவீன இந்தியாவின் கோவில்கள் என்றும், இந்தியாவின் முதுகெலும்பு என்றும் வர்ணிக்கப்படும் பொதுத் துறை நிறுவனங்கள் லாப நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. பொதுத்துறையில் அரசின் பங்குத்தொகை 51 சதவீதம் இருந்ததால் மக்களின் சேவைக்காவும், நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சாலைகளாக, மருத்துவமனைகளாக, கல்விக்கூடங்களாக, பொதுவினியோகத்துறை மானியங்களாக சேவையில் பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கிறது. இவற்றில் தண்ணீர், சுகாதாரம், போக்குவரத்து போன்ற துறைகள் மக்களுக்கு நேரடியாக சேவை செய்யக்கூடியதாக இருக்கின்றன. ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் 300 பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளன. அந் நிறுவனங்களில் சிறப்பாக செயல்பட்டு லாபம் ஈட்டுபவை நவரத்தினங்கள் என்று அழைக்கப்படும். பாரதமிகு மின் நிறுவனம், கெயில் (இந்தியா) நிறுவனம், தேசிய அனல் மின் நிறுவனம், இந்திய உருக்கு ஆணையம், இந்திய நிலக்கரி நிறுவனம், இந்தியன் ஆயில் கார்ப்பரேசன், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம், இந்திய கப்பல் போக்கு வரத்து கழகம் உள்ளிட்டவை ஆகும். பி.எஸ்.என்.எல் போன்ற பொதுதுறை நிறுவனங்கள் வேண்டுமென்றே திட்டமிட்டே நஷ்ட்டத்திற்கு தள்ளப்பட்டு அவை நஷ்ட்டமடைந்ததாக கூறியும், அரசுக்கு அதிகலாபம் தரும் பங்குகளை கூட தனியாருக்கு தாரைவார்க்கப்படுகிறது. The national monetisation Pipeline என்ற பெயரில் புதிய திட்டத்தை உருவாக்கி பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அதன்படி ஒன்றிய அரசு 2020-21 நிதியாண்டில் பொதுத்துறை நிறுவனப் பங்குகளை விற்று 2.1 லட்சம் கோடி ரூபாய் வருமானம் ஈட்டும் இலக்கை அடைய தீர்மானித்தது. ஐ.டி.பி.ஐ வங்கி, பி.பி.சி.எல், இந்தியன் ஷிப்பிங் கார்ப்பரேஷன், கண்டெய்னர் கார்ப்பரேஷன், நீலாஞ்சல் இஸ்பத் நிகாம் லிமிடெட் உள்ளிட்ட நிறுவனங்களின்

பங்குகளை விற்பனை செய்வதன் மூலமும் இலக்கை அடைய தீர்மானித்தது, ஆனால் அதை பூர்த்தி செய்வில்லை என்பதும், ஆன்லைனில் ரயில்வே டிக்கெட் விற்பனை செய்யும் ஐ.ஆர்.சி.டி.சி நிறுவனத்தை சந்தைப்படுத்தினால் அதிக லாபம் வரும் என்று பாஜக அரசு எண்ணியது. அந்த நிறுவனத்தின் பங்கு இதுவரை எந்த லாபத்தையும் ஈட்டவில்லை ஆனால் அதன் பங்குகள் முன்பிருந்ததைவிட கீழே இறங்கிருக்கின்றன என்பதும் நாமறிந்த கசப்பான உண்மை. மேலும் பொதுத்துறைகளில் அந்நிய நேரடி முதலீடு வரம்பை 49 சதவீத்திலிருந்து 74% சதவீதமாக உயர்த்தி கடந்த ஆண்டு ஒன்றிய நிதியமைச்சர் பட்ஜெட் உரையில் அறிவிக்கப்பட்டது. அட்சயப்பாத்திரம் என்று அழைக்கப்படும் எல்.ஐ.சியின் சிறப்பு சட்டத்தின்படி காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையச் சட்டம் 1999 அன்னிய நேரடி முதுலீட்டுக்கு அனுமதி வழங்காததால் எல்.ஐ.சி.யில் அன்னிய நேரடி முதலீட்டை அனுமதிக்க NSE (National Stock Exchange)-ன் நிபந்தனைகளை தளர்த்தியதன் மூலம் எல்.ஐ.சியின் பங்குகளின் விற்பனையை விரைவுபடுத்தவுள்ளது. இது பொன் முட்டையிடும் வாத்தின் கழுத்தை நெறிப்பதற்கு சமம்.

வங்கி என்பதற்கு கூட்டுப்பங்கு நிதி என்று பொருள். 1947 முதல் 1969 வரை தனியார் வசமிருந்தபோது 500க்கும் மேற்பட்ட வங்கிகள் திவாலானது. நாட்டின் விவசாயம் தொழில் வளர்ச்சி வேலையின்மையைமையப்படுத்தும் வகையில் 14 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டது. 1969 முதல் 1991 வரை சிறு குறு நிறுவனங்கள், கிராமப்புறங்கள் வளர்ச்சிக்கு உதவின. 1991 ல் தாராளமய கொள்கை அறிமுகமான பின் தனியார் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டது. ஏழை எளியோருக்கு வழங்கும் கடனைவிட பெருமுதலாளிகளுக்கு தனியார் மற்றும் அரசு வங்கிகள் கூட்டாக சேர்ந்து கடன்களை வாரி வழங்கின அவை பின்னர் வாராக் கடன்களாக மாறின. இந்நிலையில் வங்கி கடன் திருப்பிக்கட்டாததால் வங்கி அதிகாரிகள் ஒரு விவசாயின் நிலத்திலிருந்து டிராக்டரை ஜப்தி செய்த கொடுமையும், வீடுகடன் பெற்றவர்கள் திருப்பி செலுத்தவில்லையென்றால் வீடுகளை ஜப்தி செய்து ஏலம் விடுவது போன்ற கொடுமைகளும் நடந்தேறும் இந்நாட்டில்தான் சாமானியனுக்கு ஒரு நீதி செல்வந்தனுக்கு ஒரு நீதி என பொதுத்துறை வங்கிகளில் 100 கோடிக்கும் அதிகமான கடன்களைப்பெற்ற தொழிலதிபர்களின் கடன்கள் கடந்த 8 ஆண்டுகளில் வாராகடன்கள் என தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. வங்கிகளில் கடன் பெற்றும் திரும்ப செலுத்தும் வசதி இருந்தும் திரும்ப செலுத்தாதவர்களை wilful difaulters என்றும் அவ்வாறு திருப்பி செலுத்தாதவர்கள் எண்ணிக்கை 2426 என்றும் இவர்கள் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.1.47 லட்சம் கோடி என்று தமிழ்நாளேடு கூறுகிறது.

மாநிலங்களின் உரிமைகளை பறிக்கும் வகையில் புதிய தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கும் விதிகளில் திருத்தங்கள் கொண்டு வந்து சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவறிக்கை 2020ல் இனிமாநிலங்கள் அனுமதிபெறத் தேவையில்லை. ஒன்றிய அரசின் அனுமதி பெற்று புதிய தொழிற்சாலைகள் அமைக்கலாம் என்றும், சமீபத்தில் இந்திய ஆட்சிப்பணி விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இந்திய ஆட்சிப்பணியமைப்பில் பணியாற்றும் அதிகாரிகள் மத்திய அரசுப் பணிக்கு மாறும்போது மாநில அரசின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்பதை திருத்தம் செய்து மாநில அரசின் ஒப்புதல் பெறத்தேவையில்லை என்று மாற்றி மத்திய மாநில அரசின் கூட்டாட்சி தத்துவத்தை சிதைத்துக் கொண்டிருக்கிறது. மாநிலங்களவையில் பாஜக அரசு பெரும்பாண்மையுடன் ஆட்சி அமைத்ததால் தனக்கு சாதகமான தீர்மானங்களை எளிதில் நிறைவேற்றுகிறது.

ஆங்கிலேய ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டிருந்த இந்தியாவில் ஜமீன்தார்கள் எனப்படும் பெருமுதலாளிகளையும் அவர்களுக்கு ஆதரவாக இருந்த ஆங்கிலேயர்களை அகற்றி இந்நாட்டின் விடுதலைக்கு வித்திட்டது போன்று, இந்தியாவின் மனிதவளங்களையும் இயற்கை வளங்களையும் கார்ப்பரேட்டுகள் எனப்படும் பெரு முதலாளிகள் கொள்ளையடிக்கவும் அவர்களுக்கு ஆதரவாக சட்டத்திருத்தங்களை செய்து நாட்டின் குடிமக்கள் நலனுக்கெதிராக, இந்திய இறையாண்மைக்கெதிராக மதம்,

மொழி, இனம் என பிரித்தாளும் சூழ்ச்சி செய்து நாட்டையும் நாட்டு மக்களையும் பிளவுபடுத்த துடிக்கும் தீயசக்திகளை அப்புறப்படுத்திட இன்னொரு விடுதலைப் போராட்டத்திற்கு உழைக்கும் வர்க்கத்தினர் தயாராவோம். இந்திய இறையாண்மையை காப்போம். சுரண்டலுக்கெதிராக பொதுமக்களையும் உழைக்கும் வர்க்கத்தையும் காத்திட பெருமுதலாளித்துவத்தை நாட்டைவிட்டே மகாகவி பாரதி பாடியதைப்போல் போபோ வென்று வெள்ளையர்களை விரட்டியதுபோல் அந்நிய கொள்ளையர்களை விரட்டுவோம்.

"ஜாதி நூறு சொல்லுவாய் போபோபோ
தரும மொன்றியற்றிலாய் போபோபோ
நீதி நூறு சொல்லுவாய்-காசொன்று
நீட்டினால் வணங்குவாய் போபோபோ
தீது செய்தஞ்சிலாய் - நின் முன்னே
தீமை நிற்கிலோடு வாய் போபோபோ
சோதிமிக்க மணியிலே-காலத்தால்
சூழ்ந்தமாசு போன்றனை போபோபோ"

ஒன்றிய ப.ஜ.க அரசு மூன்று வேளாண்சட்டதிருத்த மசோதா, மின்சார சட்டத்திருத்தம் உள்ளிட்டவைகளை நிறைவேற்றியது. வெயில், புயல், மழைக்கு அஞ்சாது நடந்த போராட்டத்தினை கலைக்க ஒன்றிய மோடிஅரசு கலவரம் ஏற்படுத்தியும், முள்வேலி அமைத்தும், சாலை குறுக்கே பெரும்பள்ளம் பறித்தும், துப்பாக்கி சூடு நடத்தியும் எவ்விதமான அடக்கு முறைக்கும் அஞ்சாமல் ஒரு வருடகாலம் நடத்திய உறுதியான போராட்டத்தின் மூலம் உலகத்தின் கவனத்தை ஈர்த்தது மட்டுமல்லாமல் மூன்று வேளாண் திருத்த சட்ட மசோதாவை வாபஸ் பெறவைத்த விவசாயிகளின் போராட்டம் வரலாற்று சிறப்புமிக்கது.

ஆனால், தனது அரசியல் ஆதாயத்துக்காக வாபஸ் பெற்றுள்ள முதலாளித்துவ அரசுவேளாண் திருத்தச் சட்டங்களையும் மின்சார திருத்த சட்டங்களையும் எப்பொழுது வேண்டுமானாலும் மீண்டும் இயற்றமுடியும் எனவும், ஒன்றிய அரசு எழுத்துப் பூர்வமாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் அலட்சியம் காட்டுவதாகவும் சம்யுக்தா கிசான் மோர்ச்சா தெரிவித்துள்ளது. மேலும், 2022 ஜனவரி 31 அன்று "A Day of Betrayal" (துரோகதினம்) என்ற போராட்ட இயக்கத்திற்கு அறிவித்தது மட்டு மல்லாமல் அன்றைய தினத்தினை கருப்புதினமாக அனுஷ்டிக்க மத்திய தொழிற்சங்கங்கள் கூட்டாக அறைகூவல் விடுத்தது குறிப்பிடத்தக்கது. 2022 மார்ச் 28, 29 இரண்டு நாட்கள் மத்திய தொழிற்சங்கங்கள் நடத்தும் அகில இந்திய வேலை நிறுத்தத்திற்கு சம்யுக்தா கிசான் மோர்ச்சா ஆதரவளித்தள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அகில இந்திய மாநில அரசு ஊழியர்கள் சம்மேளனம் அழைப்புவிடுத்துள்ளதை தொடர்ந்து நமது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14 ஆம் மாநில மாநாட்டில் விடுக்கப்பட்ட முதல் அறை கூவல் தீர்மானம் இந்நாட்டின் விவசாயிகள், தொழிலாளர்கள், அரசுஊழியர்கள், ஆசிரியர்கள் என அனைத்து உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளை பாதுகாத்திட, வரும் மார்ச் 28, 29 ஆகிய இரண்டு நாட்கள் நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் பங்கேற்போம் என்பதாகும். அரசு ஊழியர்கள் அனைவருக்கும் பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வரவேண்டும், புதிய ஓய்வூதிய திட்டத்தை திரும்பபெற வேண்டும். அனைத்து அரசு துறைகளிலும் அவுட் சோர்சிங் முறையில் பணியமர்த்துதலை கைவிடவேண்டும். இளைஞர்களுக்கு வேலைவாய்ப் பளிக்கும் வகையில் அனைத்து அரசு துறைகளிலும் காலி பணியிடங்களை நிரப்பவேண்டும் உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு தழுவிய இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அறை கூவல் விடுக்கின்றது. நாட்டைப் பாதுகாக்க அரசு ஊழியர்களாகிய நாம் அனைவரும் பங்கேற்போம். அகில இந்திய வேலைநிறுத்தம் என்பது வெற்று முழக்கமல்ல அது இன்னொரு விடுதலைப் போர்.

புரட்சிகர இயக்கத்தின் மூலவர்களான மார்க்ஸ் ஏங்கெல்ஸ் கருத்துப்படி "முதலாளித்துவம் தோற்றுவித்த தொழிலாளி வர்க்கமே முடிவில் முதலாளித்துவத்திற்கு சாவுமணி அடிக்கும். அதன் நலன்கள் முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு முரணானவை என்பதால் முதலாளி வர்க்கம் தன் அழிவுக்குதானே குழிதோண்டிக் கொள்கிறது. முதலாளித்துவ வர்க்கத்தை ஒழித்துகட்டுவதன் மூலம் வர்க்கங்களற்ற சமுதாயம் தொழிலாளி வர்க்கத்தால் மலரும்." ●

# அனைத்து மக்களையும், ஊழியர்களையும் கடுமையாகத் தாக்கும்

# ஒன்றிய அரசு பட்ஜெட்

நாடாளுமன்றத்தில் 2022-23ஆம் ஆண்டுக்கான நிதி-நிலை அறிக்கை வெளியிடப்பட்டது, கொரோனா பெருந்தொற்று கால கட்டத்தில் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் மக்களின் வாழ்நிலையை மேம்படுத்துவதற்கும், பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ள சிறு, குறு, நடுத்தர தொழில்களை மீட்டெடுப்பதற்கும், உற்பத்தி, சேவை மற்றும் நிதித்துறை நிறுவனங்களை வலுப்படுத்துவதற்குமான எந்தவித உருப்படியான திட்டத்தையும் இந்த நிதி-நிலை அறிக்கை பிரதிபலிக்கவில்லை, வேலை இழப்பும், அதனால் ஏற்பட்டிருக்கும் வருமான இழப்பும், பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களின் வாழ்நிலையை மிக மோசமாக சீர்குலைத்துள்ளது, கிராமப்புற வேலையின்மை பல மடங்கு உயர்ந்துள்ளபோதிலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத் திட்டத்திற்கான நிதியை ரூ,73 ஆயிரம் கோடியாக குறைத்துள்ளது, அதாவது 2021-22ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 98 அயிரம் கோடியிலிருந்து 25ஆயிரம் கோடி குறைத்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு முழுமையாக வேலை அளித்திட 2,64 லட்சம் கோடி ஒதுக்கிட வேண்டிய நிலையில் ஏறக்குறைய 2 லட்சம் கோடி மொத்தத்தில் குறைந்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இது கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும் நடவடிக்கை என்பதுடன் பசி, பட்டினி மேலும் அதிகரிக்க வழி கோலும், விவசாயிகளின் துயரங்களுக்குத் தீர்வை சொல்லாமல் மீண்டும் ஒரு முறை விவசாயிகளுக்கு நிதி-நிலை அறிக்கை ஏமாற்றத்தை தந்துள்ளது. 2022ஆம் ஆண்டிற்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்ற கடந்த கால வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான அறிவிப்புகள் நிதி-நிலை அறிக்கையில் துளியும் இல்லை. கானல் நீராக கரைந்து போனது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலைமைய(எம்.எஸ்.பி.) தீர்மானிப்பதற்கு போதிய நிதி ஒதுக்கீட்டை செய்யவில்லை. நெல், கோதுமை கொள்முதலுக்காக கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் தற்போதைய பட்ஜெட் 11 ஆயிரம் கோடி குறைத்து ஒதுக்கப்பட்டுள்ளது. உணவு, எரிபொருள் மற்றும் உரம் உள்ளிட்ட முக்கிய அத்தியாவசியப் பொருட்களுக்கான மானியங்களும், மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கீடும் குறைக்கப்பட்டுள்ளது. சுகாதாரம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கீடுகளும் குறைக்கப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் கார்ப்பரேட் வரியினை கணிசமாக குறைத்து கார்ப்பரேட்டுகளின் லாபங்களை பெருமளவு திரட்டிக் கொள்ளவும், குவித்துக்கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஜி.எஸ்.டி. மூலமாகவும், பெட்ரோலிய பொருட்கள் மீதான கடுமையான மறைமுக வரிகளை மக்கள் தலையில் சுமத்தியதன் மூலாமாகவும் அரசின் வருவாய் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கான அனைத்து மிகப்பெரிய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் பெரிய அளவிற்கு வெட்டப்பட்டுள்ளன. மத்திய உணவு கிடங்கிற்கான விளை பொருள் கொள்முதலுக்கான நிதி 28 சதவீதம் அளவிற்கு கடுமையாக வெட்டப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்களது உற்பத்தி பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை சட்டப்பூர்மாக உத்திரவாதம் செய்யுங்கள் என்று பெரும்

போராட்டம் நடந்து வரும் வேளையில் இந்த தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. உரமானியம் 25 சதவீதம் வெட்டப்பட்டுள்ளது. பி.எம்.கிசான் திட்டத்தின் கீழ் 12.5 கோடி விவசாய குடும்பங்களுக்கு ரூ. 6ஆயிரம் அளிப்பதாக கூறப்பட்ட திட்டத்திற்கு உண்மை மதிப்பீடுகளின் அடிப்படையில் ரூ.75 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் ரூ.68 ஆயிரம் கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. பயிர் காப்பீடு திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் ரூ.500 கோடி ரூபாயை வெட்டிவிட்டார்கள். கடந்த 2 ஆண்டுகளில் சமையல் எரி வாயு மானியம் பெரிய அளவிற்கு வெட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதற்கான மானிய ஒதுக்கீடு 60 சதவீதம் அளவிற்கு வெட்டப்பட்டது. இந்நிலையில் 2022-23 பட்ஜெட்டில் மற்றுமொரு 60 சதவீதம் வெட்டப்பட்டுள்ளது.

இந்த நிதி-நிலை அறிக்கையில் முறைசாராத் தொழிலாளர்களுக்கான எந்த நிதி ஒதுக்கீடும் புதிதாக இல்லை. இ.ஷ்ரம் எனும் இணைய தளத்தின் மூலமாக முறைசாராத் தொழிலாளர்கள் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்களுக்கான சிறப்பு நிதி எதுவும் இல்லை. ஒன்றிய அரசின் இந்த நிதி-நிலை யானது கோடிக்கணக்கான தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து பிரிவு மக்கள் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. உதாரணம் பொருளாதார மந்தம் 1258 சிறு தொழில்களை அழிந்து விட்டது. 83190 வேலைவாய்ப்புகள் பறிபோயின. இது கர்நாடகாவில் மட்டும். நாடு முழுவதும் இதே நிலைதான்.

**கல்வி, வேலை வாய்ப்பு யாரை நோக்கி**

மத்திய பட்ஜெட் 2022 கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையில் ஆக்கப்பூர்வ விளைவுகளை ஏற்படுத்தும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

கல்வித்திறன் மேம்பாடு குறித்து இணைய வழி கருத்தரங்கில் பேசிய அவர் தேச நிர்மான பணிகளில் இணைய தலைமுறையினரின் முக்கியத்துவம் தேவையானது என்றும் நமது இளைஞர்களுக்கு அதிகாரமளிப்பது இந்தியாவின் எதிர் காலத்திற்கு அதிகாரமளிப்பதாகும் என்றும் கூறியுள்ளார்.

இவர் பிரதமர் ஆவதற்கு முன்பு அளித்த தேர்தல் வாக்குறுதியில் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்குவோம் என்றார். ஆனால் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்காதது மட்டுமின்றி ஏற்கனவே இருந்த வேலைகளை பறித்ததுதான் இவரது அரசு செய்த முக்கியமான வேலை.

கொரோனா காலத்தில் சிறு, குறு தொழில் நிறுவனங்கள் சமாளிக்க முடியாமல் ஏராளமாக மூடப்பட்டன. அதற்கு முன்பு ஒன்றிய அரசினால் மேற்கொள்ளப்பட்ட பண மதிப்பிழப்பு மற்றும் ஜி. எஸ்.டி வரி விதிப்பால் மூச்சுத் திணறிக்கொண்டிருந்த இந்திய பொருளாதாரம் கொரோனா காலத்தில் சுருகிப்போய் இளைஞர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்துள்ளது. அதைப் போக்குவதற்கான எந்தத் திட்டமும் ஒன்றிய அரசிடம் இல்லை.

வேலை வாய்ப்பை உருவாக்காமல் இளைஞர்களுக்கு எவ்வாறு அதிகாரமளிக்க முடியும். அதுமட்டுமின்றி நம்முடைய அரசு தரமான கல்வியை உலக மயமாக்கியுள்ளதாகவும், கல்வித்துறையில் மேம்படுத்தப்பட்ட தரம் மற்றும் மேம்படுத்தப்பட்ட திறமைகளுடன் கல்வியை விரிவுபடுத்தியுள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார். கல்வித்துறையை கார்ப்பரேட் மயமாக்கி வருவதை தான் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கல்வித்துறையில் மேம்படுத்தப்பட்ட தரம் மற்றும் திறமை என்று பிரதமர் கூறுவதெல்லாம் அனைவருக்கும் கல்வி என்பதை மறுத்து தகுதி, திறமை என்கிற பெயரில் பெரும்பகுதி மக்களுக்கு கல்வி வாய்ப்பை மறுப்பது தான். இதுதான் இவரது அரசு உருவாக்கிய புதிய கல்விக் கொள்கையின் உள்ளடக்கம்.

கல்வி என்பது பன்முக வளர்ச்சியை மேம்படுத்துவதாக அமைய வேண்டும். ஆனால் தொழிற்சாலைகளுக்கு ஏற்ற முறையில் கல்வியின் தரத்தை மேம்படுத்தியுள்ளதாக இவர் கூறுவது கல்வியை முதலாளிகளின் தேவைக்கேற்ற வகையில் பாடத் திட்டத்தை

உருவாக்கி இருப்பதைதான். இதனால் ஒருங்கிணைந்த சமூக வளர்ச்சி என்பது பெரும் பின்னடைவை சந்திக்கும்.

பிரதமர் தன்னுடைய உரையில் கல்வியை டிஜிட்டல் மயமாக்குவது குறித்து சிலாகித்துள்ளார். இதன் மூலம் கிராமப்புற தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பயன் பெறுவார்கள் என்றும் கூறியுள்ளார். கிராமப்புற கல்வியை புறக்கணித்து டிஜிட்டல் மயம் என்கிற பெயரில் மேல்தட்டு பகுதியினருக்கான ஒன்றாக மட்டும் கல்வியை மாற்றிக் கொண்டிருக்கின்ற ஒன்றிய அரசு இருளை ஒளி என்பது பிரதமர் வழக்கமாக பின்பற்றும் வார்த்தை ஜாலமே ஆகும் என பத்திரிக்கைகள் வெளிப்படுத்துகின்றது.

**மின் வாரியங்கள் நட்டத்திற்கு யார் காரணம்?**

மின் வாரியத்தில் நட்டத்தை குறைக்க கட்டணத்தை உயர்த்துமாறு மாநில அரசுகளை ஒன்றிய அரசு கட்டாயப்படுத்தி வருகிறது. ஆனால் மின் வாரியத்திற்கு தேவையான நிலக்கரியை ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனமான கோல் இந்தியா விநியோகம் செய்து வந்தது. மின் வாரியங்களுக்கு இந்த நிலக்கரி ரயில் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டது. நிலக்கரி விலையை ஒன்றிய அரசு தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோது ஒரு டன் ரூ.400 என்ற விலை இருந்தது.

தாராளமய, தனியார்மயக் கொள்கையால் நிலக்கரிச் சுரங்கங்கள் தனியாருக்கு ஒதுக்கப்பட்டன. பொதுத்துறை நிலக்கரி சுரங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் நிலக்கரி முன்பு ஒன்றிய, மாநில அரசுகளின் மின் நிலையங்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டு வந்தது. ஒரு அனல் மின் நிலையம் அமைக்கும்போதே அந்த நிலையத்திற்குத் தேவையான நிலக்கரிக்குப் படுகைகள் ஒதுக்கப்படும். ஆனால் இந்த நடைமுறை தற்பொழுது கைவிடப்பட்டு யார் வேண்டுமானாலும் நிலக்கரியை எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை உருவாயின. பின்னர் விலைக்கட்டுப்பாடு ஒழிக்கப்பட்டு விட்டது. இதனால் சுரங்கங்களை ஏலம் எடுத்த தனியார் நிறுவனங்கள் என்ன விலையைக் தீர்மானிக்கின்றனவோ அந்த விலையை அனல் மின் நிலையங்கள் அதாவது மாநில அரசுகள் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

சரக்கு ரயில்கள் மூலம் நிலக்கரி கொண்டு செல்லப்படுகிறது. சரக்கு கட்டணத்தை ரயில்வே உயர்த்தும் போது நிலக்கரி விலையும் கடுமையாக உயர்ந்து விடுகிறது. இதனால் கடந்த சில ஆண்டுகளாக வெளி நாட்டிலிருந்து வாங்கும் நிலக்கரிக்கு நிகராக உள்நாட்டு நிலக்கரி விலையும் உயர்ந்துள்ளது. மின் உற்பத்தி செலவு அதிகரித்ததற்கு இதுவும் ஒரு காரணம்.

மின் நிலையங்களை அமைத்து உற்பத்தியை பெருக்கத் தேவையான நிதியை ஐந்தாண்டு திட்டங்களில் ஒன்றிய அரசு முன்பு ஒதுக்கீடு செய்து வந்தது. மின்சார சட்டம் 2003 மற்றும் 1998ல் மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் அமைக்கப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீட்டை ஒன்றிய அரசு நிறுத்தி விட்டது. இதனால் தேவையான மின் நிலையங்கள் அமைக்கப்படாத காரணத்தால் மின் தேவையை பூர்த்தி செய்ய தனியாரிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டிய நிலையை ஒன்றிய அரசு ஏற்படுத்தியுள்ளது.

தனியாரிடம் மின்சாரத்தை வாங்கும்போது அதன் விலை அதிகமாக உள்ளது. இதனால் மாநில மின் வாரியங்களுக்கு கூடுதல் செலவு ஏற்படுகிறது. தமிழகத்தின் அனுபவமே இதற்கு சரியான சான்று. மாநிலத்தின் மொத்த மின் தேவையில் 9 விழுக்காடு மின்சாரத்தை வாங்குவதற்கு 1998 முதல் 2011ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு மின் வாரியம் தனது மொத்த வருமானத்தில் 35 விழுக்காடு தொகையை செலவிடவிட்டது. மற்ற மாநிலங்களுக்க இதே நிலை தான். இந்த மோசமான நிலைக்கு மாநில அரசுகள் காரணமல்ல. ஒன்றிய அரசின் கொள்கைதான் காரணம். எனவே நட்டத்திற்கு மாநில அரசு மீது குற்றம் சாட்டுவதை கைவிட்டு தனது கொள்கையை ஒன்றிய அரசு மாற்றிக் கொள்ள வேண்டும். அனல் மின் நிலையங்களுக்கு கட்டுப்படியான விலையில் நிலக்கரியை ஒன்றிய அரசே ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

(உதாரணம் பொருளாதாரத்தை இயக்க ஒன்றிய அரசாங்கம் (மோடி) கடனை வழங்கி கொண்டுள்ளது. கடன் சுமை ரூ.1522 லட்சம் கோடி ஜி.டி.பி.யில் 59 சதவீதம் கடனுக்கான வட்டி மட்டும் மத்திய வரி வருவாயில் 48.6சதவீதம் செலவாகிறது. ஒன்றிய அரசு(மோடி) இந்தியாவை கடன் வலையில் தள்ளுகிறது)

**ஐந்து மாநில தேர்தல் – பிறகு கச்சா எண்ணெய் விலை**

ஐந்து மாநில சட்டப் பேரவை தேர்தலுக்கு பிறகு இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலையானது பல மடங்கு உயரும் ஆபத்து உள்ளதாக எண்ணெய் பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு 100 அமெரிக்க டாலரை நெருங்கியுள்ளது. தற்பொழுது ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 99.38 டாலராக உயர்ந்துள்ளது. இது கடந்த 7 ஆண்டுகளில் இல்லாத விலை உயர்வாகும். இதற்கு முன்பு 2014ஆம் ஆண்டு பிரெக்சிட் பிரச்சனை காரணமாக கச்சா எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு 99 டாலராக அதிகரித்து அதன் பிறகு தற்பொழுதுதான் கச்சா எண்ணெய் விலை மீண்டும் 99.38 டாலர்களுக்கு உயர்ந்துள்ளது.

எனினும் சட்டப் பேரவை தேர்தல் நடைபெறுவதால் ஒன்றிய அரசானது பெட்ரோல், டீசலின் சிலலரை விலையை உயர்த்தாமல் விட்டு வைத்துள்ளது.

கடந்த 2021 அக்டோபர் 26 அன்று கச்சா எண்ணெய் விலை 82.74 அமெரிக்க டாலராக இருந்தபோதே இந்தியாவில் பெட்ரோல் விலை லிட்டருக்கு அதிகபட்சமாக 110 ரூபாய் 4 காசுகளாகவும் டீசல் விலை 98 ரூபாய் 42 காசுகளாகவும் இருந்து லிட்டர் 120 ரூபாயை நோக்கி அது சென்றது.

இதற்கு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு வந்ததைத் தொடர்ந்து தீபாவளிக்கு முதல் நாள் 2021 நவம்பர் 3ஆம் தேதியன்று இரவு பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை குறைக்க வேண்டிய கட்டாயத்திற்கு மோடி அரசு ஆளானது. இதன் மூலம் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.5, டீசல் விலை ரூ.10 குறைந்தது.

நவம்பர்-4 ஆம் தேதி முதல் நாடு முழுவதும் கடந்த 112 நாட்களாக ஒரே விலையில்தான்(தமிழகத்தில் பெட்ரோல் ரூபாய் 101-40 காசுகளுக்கும், டீசல் 91 ரூபாய் 43 காசுகளுக்கும்)விற்கப்பட்டு வருகிறது. இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம் , ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் உள்ளிட்ட எந்தவொரு பொதுத்துறை நிறுவனமும், விலையை உயர்த்தவில்லை.

இதற்கு உ.பி, பஞ்சாப், உத்தரகாண்ட், கோவா, மணிப்பூர் ஆகிய 5 முக்கியமான மாநிலங்களில் சட்டப் பேரவை தேர்தல் நடைபெறுவதே காரணம். இதற்கு முன்பு தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம், அசாம், புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் தேர்தல் நடந்தபோதும் இந்த பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படவில்லை. தேர்தல் முடிந்ததும் வழக்கம்போல் உயர்த்தப்பட்டு அக்டோபரில் ஒரு லிட்டர் பெட்ரோலை 110 ரூபாய்க்கு கொண்டு சென்றனர்.

எனவே, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை பீப்பாய் 99 டாலரர்களைத் தாண்டியுள்ள சூழலில் மார்ச்-7ஆம் தேதிக்கு பிறகு நிச்சயமாக இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை பன்மடங்கு உயர்த்தப்படலாம் என்று கூறப்படுகிறது.

கடந்த அக்டோபர் மாத விலையைக் காட்டிலும் எண்ணெய் விலை சுமார் 17 டாலர்கள் (சுமார் 12 ஆயிரம்) உயர்ந்துள்ளதால் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை மானியங்கள் வழங்கப்படாத பட்சத்தில் பழையபடியே 120 ரூபாயை நோக்கி செல்லும் என்று எண்ணெய் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருவதை ஒப்பிட்டு நிதயமைச்சர் நிர்மலாசீத்தாராமன் அபாய ஒலி எழுப்பியுள்ளார். இது நாட்டின் நிதி ஸ்திரத் தன்மைக்கு சவாலை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார். நிதி நிலைத் தன்மை மேம்பாட்டுக் கவுன்சில்(குளுனுஊ) கூட்டத்தில் உக்ரைன் போர் விவகாரம் சர்வதேச கச்சா

எண்ணெய் குறித்து விவாதிக்கப்பட்டதால், கச்சா எண்ணெய் விலை நிர்ணயம் செய்வது மிக கடினம். கச்சா எண்ணெய் விலை உயர்வு நாட்டின் நிதி ஸ்திரத்தன்மைக்கு இவ்விரு பிரச்சினைகள் மிகபெரும் சவாலாக உருவாகியுள்ளது என்று கூறியுள்ளார்.

**உ.பி-ல் பசுவை வைத்து தேர்தல்**

உத்திரபிரதேச சட்டமன்றத் தேர்தலில் நான்கு கட்ட வாக்குப் பதிவு முடிந்துவிட்டது. அடுத்தக்கட்ட வாக்கு பிரச்சாரத்தில் மக்கள் பிரச்சினைகளைப் பற்றி பேசுவதைவிட மாடுகளின் பிரச்சினைகளைப்பற்றி பேசி வருகிறார் உ.பி முதலமைச்சர் ஆதித்திய நாத். பிரச்சாரக் கூட்டங்களில் அயோத்தி மற்றும் பாரபங்கி ஆகிய இடங்களில் பசுக்களை பராமரிப்பவர்களுக்கு மாதம் ரூ.900 உதவி தொகை வழங்கப்படும் என அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்.

பா.ஜ.க. அரசின் மீது தீரா கோபத்தில் இருக்கும் உத்திரபிரதேச விவசாயிகள் சற்று ஆறுதல் படுத்தும் நோக்கத்திதுடன் இந்த அறிவிப்பு வெளியிட்டிருக்கலாம் என்று தெரிகிறது. ஆனால் விவசாயிகளுக்கான வாழவாதாரங்களுக்கு தீர்வுகளை செய்யாமல் பசு பாதுகாப்பு என்ற பெயரில் அறிவித்திருக்கிறது. ஏற்கனவே பசுக்களின் பெயரால் உ.பி. அரசு நடத்தியுள்ள மெகா ஊழல்களுக்கு மேலும் வலு சேர்ப்பதாகவே அமைந்துள்ளது. ஏற்கனவே கோவில்கள் என்ற பெயரில் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. பிரமுகர்களுக்குத்தான் அரசின் நிதி பெரிய அளவுக்கு திருப்பி விடப்பட்டிருந்தது என்பது நினைவு கூறத்தக்கது.

உத்திரபிரதேச அரசு மட்டுமல்ல, ஒன்றிய அரசும் கடந்த காலத்தில் ஒன்றிய மோடி அரசும் கடந்த ஆட்சி காலத்தின் கடைசி பட்ஜெட்டில் (2019 பிப்ரவரி) பசு பாதுகாப்பு என்ற பெயரில் 750 கோடி ஒதுக்கியது. இந்த நிதி முழுவதும் பசு காவலர்கள் என்ற பெயரில் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. பிரமுகர்கள் நடத்தும் அமைப்புகளுக்காகத்தான சென்றது. ராஷ்டிரிய காமதேனு ஆயோக் என்ற பெயரில் ஒன்றிய அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட இந்த நிதியுடன் ஒப்பிடும்போது அதே பட்ஜெட்டில் நாடு முழுவதும் தொழிலாளர்களின் ஓய்வூதியத்திற்காக அறிவிக்கப்பட்ட 500 கோடி ரூபாய் மிகமிகக் குறைவானது என்பது கூற தேவையில்லை. 42 கோடி தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி அறிவிப்பதற்கு பதிலாக மோடி அரசு பசுக்களின் பாதுகாப்பை முதன்மையாக முன்னிறுத்தியது.

அதே பாதையில் தற்பொழுது வீழ்ச்சியின் விளிம்பில் நிற்கும் உத்திரபிரதேச அரசு மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பிரச்சாரத்தில் பேசிய உ.பி. முதல்வர் ஆதித்யநாத், பசுக்களை கொல்ல அனுமதிக்கமாட்டோம் என்று கூறியதோடு பசுக்களை பாதுகாத்தவர்களுக்கு வாக்களியுங்கள். கொல்பவர்களுக்கு அல்ல என்று பேசியுள்ளார். உ.பி. தேர்தல் பிரச்சார துவக்கத்தில் அவர் 80 சதவீதத்திற்கும் 20 சதவீத்திற்கும் இடையே நடக்கும் போர் என்று கூறினார். அதையே தற்போது வேறு வார்த்தையில் பசு காவலர்கள், பசுவை கொல்பவர்கள் என்று பேசியிருக்கிறார். , வெறுமன பிரச்சார பேச்சு அல்ல. மாட்டிறைச்சி உண்ணும் சமூகங்களைச் சேர்ந்த மக்களுக்கு எதிரான பகிரங்கமான வன்முறை தூண்டுதலே ஆகும். உ.பி. இளைஞர்கள் லட்சக்கணக்கில் வேலையில்லாமல் தவிக்கின்றார்கள். கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு உள்ளிட்ட அடிப்படை பிரச்சினைகளை பேசாமல் திசை திருப்பும் பா.ஜ.க. ஆட்சியாளர்களை இன்னும் சில நாட்களில் உ.பி மக்கள் முற்றாக புறக்கணிப்பார்கள்.

இந்திய நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை பொதுத்துறை நிறுவனங்களை லாப வெறியர்கள் மற்றம் யுக வணிகர்களுக்கு அள்ளிக்கொடுக்கிறது ஒன்றிய அரசு. உதாரணத்திற்கு எல்.ஐ.சி. பங்குகளை விற்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1956ஆம் ஆண்டு 5 கோடி ரூபாய் மூலதனத்துடன் எல்.ஐ.சி. உருவாக்கப்பட்டது. (செப்டம்பர்-1) தனியார் நிறுவனங்களை இணைத்து எல்.ஐ.சி உருவாக்கப்பட்டது. 154 உள்நாட்டு நிறுவனங்கங்கள் 16 வெளிநாட்டு நிறுவனங்கள், 75 வருங்கால வைப்பு நிதி சங்கங்கள் ஆகியவை இதில் இணைந்தன. ஐ.ஆர்.டி.ஏ. சட்டம் வந்தபோது மூலதனம் 100

கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டது. பங்கு விற்பனைக்கு முன்னோடியாக எல்.ஐ.சி.யின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் 25,000 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. குறைந்த அளவிலான அரசு ஆதரவும், தனியார் துளைகளின் கடும் போட்டியும் இருந்தபோதிலும் 1999 முதல் எல்.ஐ.சி.யின் வளர்ச்சி பிரமிக்கத்தக்கதாக இருந்தது. 2021 மார்ச் மாதத்தில் பாலிசிகளின் எண்ணிக்கையில் அதன் மார்க்கெட் விகிதம் 81.04 சதவீதம் பிரிமியம் தொகையில் 64.74 சதவீதமாக இருந்தது எல்.ஐ.சி.யின் உபயோகிப்பாளர்கள். சேவை மிகவும் சிறந்தது என்று 1993 ஆம் ஆண்டு மார்க் சர்வேயைப் பயன்படுத்தி ஆர். என்.மல்ஹோத்ரா கமிட்டி சேவையை மிகச் சிறந்தது மற்றும் உன்னதமானது என்று மதிப்பீடு செய்துள்ளார்.

31 லட்சம் கோடி ரூபாய் வரவு-செலவு உள்ள எல்.ஐ.சி. நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய நிதி சேவை நிறுவனமாகும். 39.51 சலட்சம் கோடி சொத்துக்கள் உள்ள பாரத் ஸ்டேட் வங்கி முதலிடத்தில் உள்ளது. எல்.ஐ.சி.யில் காப்பீடு செய்யப்பட்டுள்ள மூலதனத்தின் மதிப்பு 56.86 லட்சம் கோடி ரூபாயாகும். 1,14,498 ஊழியர்கள் உள்ளனர். மொத்தம் 12,08,826 பேரில் 10,92,809 ஆக்டிவ் முகவர்கள் உள்ளனர். அதாவது 13 லட்சம் பேருக்கு நேரடியாக வேலை வழங்கும் நிறுவனம். லாபத்தின் 95 சதவீதம் பாலிசிதாரர்களுக்கு டிவிடென்டாக வழங்கப்படுகிறது. 2019-2020ல் 2,697.74 கோடி ரூபாய் அரசுக்கு லாபமாகக் கிடைத்தது. அந்த ஆண்டு எல்.ஐ.சி. செலுத்திய வரி 10,225.24 கோடி ரூபாயாகும். இந்த பொன் முட்டையிடும் பொதுத்துறை நிறுவனத்தை காப்பீட்டுத்துறையை பெரு முதலாளிகளுக்குத் தாரை வார்க்கவே எல்.ஐ.சி.யின் பங்கு விற்பனையின் மூலம் ஒன்றிய அரசு முயற்சிக்கிறது.

இந்த பின்னணியில் ஒன்றிய அரசின் மக்கள் விரோத, ஊழியர் விரோத நடவடிக்கையை கண்டித்து நாடு தழுவிய அளவில் நடைபெறும் மார்ச் 28,29 இரண்டு நாள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்போம். அந்த இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தி தேசத்தை பாதுகாப்போம். ●


## அரசு ஊழியர் இதழ் பற்றிய அறிக்கை நமுனா (18ஆம்) பாடப் பிரிவு

| | |
|---|---|
| வெளியிடும் இடம் | : சென்னை -5 |
| வெளியிடும் காலம் | : மாத இதழ் |
| அச்சிடுபவர் | : மு.அன்ப ரசு |
| நாட்டினம் | : இந்தியர் |
| முகவரி | : சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ் எண். 19/1 - 21/2 கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, சென்னை-600002 |
| வெளியிடுபவர் | : மு.அன்பரசு |
| நாட்டினம் | : இந்தியர் |
| முகவரி | : 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை-600005 |
| ஆசிரியர் | : ஆ.செல்வம் |
| நாட்டினம் | : இந்தியர் |
| முகவரி | : 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை-600005 |

ஒரு சதவீதத்துக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் மேல் பங்குத்தொகை சங்கம், 46, தேரடித் தெரு அளித்துள்ளவர்கள் திருவல்லிக்கேணி சென்னை - 600 005

மு.அன்பரசு என்னும் நான் மேலே கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அறிந்தவரை உண்மையென்று இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

சென்னை
1.3.2022

மு.அன்பரசு
வெளியிடுபவர்

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**ஆறு மாதங்களாக, ஊதியம் வழங்காத நாகப்பட்டினம் மாவட்ட மகளிர் திட்ட அலுவலரைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகப்பட்டினம்** மாவட்டச் செயற்குழு முடிவின்படி, இதர 37 மாவட்டங்களிலும் தொடர்ந்து ஊதியம் வழங்கப்பட்டுவரும் நிலையில், கடந்த 6 மாதங்களாக, நாகப்பட்டினம் உதவி திட்ட அலுவலர்களுக்கு மட்டும் ஊதியம் வழங்காத, மாவட்ட மகளிர் திட்ட அலுவலரைக் கண்டித்து, அன்று (24.02.22) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்ட மையம் சார்பில் மாவட்டத் தலைவர் பா.ராணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அ.தி. அன்பழகன் விளக்கவுரையாற்றினார்.இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்டச் செயலாளர் கே.தங்கமணி, ஓய்வுபெற்ற பி.எஸ்.என்.எல் ஊழியர் சங்க தலைவர் குருசாமி, சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் வி.சித்ரா, நெடுஞ்சாலை துறை சாலைப் பணியாளர்கள் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.கணேசன், புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநில பிரச்சார செயலாளர் அ.அற்புதராஜ் ரூஸ்வெல்ட், அரசு ஊழியர் சங்க வேதாரண்யம் வட்டச் செயலாளர் வி.எஸ்.இராமமூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றினர். நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு. சிவகுமார் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் ப.அந்துவஞ்சேரல் நன்றியுரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகள் கே. இராஜூ, எம்.மேகநாதன், வீ.உதயகுமார், மாவட்ட தணிக்கையாளர் கே.இரவிச்சந்திரன் உள்ளிட்டு அனைத்து துறை ஊழியர்கள் திரளாக ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

**பெரம்பலூர் மாவட்டம்**

**பெரம்பலூர் தலைமை மருத்துவமனையில் கூடுதலாக லேப் டெக்னீசியன்கள் பணியிடம் நிரப்ப கோரி அரசு ஊழியர் சங்கம் சார்பாகமாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது** அது சமயம் மாவட்ட தலைவர் குமரிஅனந்தன் மாவட்டச் செயலாளர் இளங்கோவன் மாவட்ட இணைச் செயலாளர் ராஜராஜன் வட்டாட்சியர் பொன்னுதுரை மற்றும் தலைமை லேப் டெக்னீசியன் வசந்த் ஆகியோர் உடனிருந்தனர் தற்காலிக பணி நீக்கத்தில் உள்ள ஊழியர்களுக்கு மீளப் பணி வழங்க மாவட்ட ஆட்சியரிடம் முறையீடு.

**அரியலூர் மாவட்டம்**

**அரியலூர் மாவட்டத்தில் தற்காலிக பணி நீக்கத்தில் உள்ள அரசு ஊழியர்களுக்கு (JE, Overseer, சத்துணவு அமைப்பாளர்) மீள பணி ஆணை வழங்க வேண்டும் எனவும் இதர ஊழியர் நலன் சார்ந்த பிரச்சனைகள் குறித்து 14-02-2022ல மதிப்பிற்குரிய அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களை சந்தித்து மனு அளிக்கப்பட்டது.** தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் தோழர் A.பெரியசாமி, மாவட்டத் தலைவர் தோழர் G. பஞ்சாபிகேசன், மாவட்டச் செயலாளர் தோழர் என்.வேல்முருகன், மாவட்டப் பொருளாளர் தோழர் P. காமராஜ், மாவட்ட துணைத் தலைவர் தோழர் P.துரை வேந்தன், மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் J. சிந்தனைச் செல்வி, ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் காமராஜ், மாவட்டச் செயலாளர் தோழர் பழனிவேல், சத்துணவு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் தோழர் எஸ்.சங்கீதா, மாவட்ட இணைச் செயலாளர் தோழர் ராஜ. வேம்பு மற்றும் T.பழூர், அரியலூர் ஒன்றிய நிருவாகிகள் உள்பட 32 ஊழியர்கள் பங்கேற்றனர்.மாவட்ட ஆட்சியர் அவர்கள் நமது கோரிக்கை மனுவினை பெற்றுக் கொண்ட உடன் JE, overseer இருவருக்கும் உடன் பணி ஆணை வழங்கப்படுவதாக கூறினார்கள். ஒரு அமைப்பாளர் ஒன்றுக்கும் மேற்பட்ட மையம் பார்ப்பதால் கூடுதல் பொறுப்பு மையத்திலே பணியில் இருப்பதால்

ஒரே நேரத்தில் இரு மையத்தில் இருப்பதில் உள்ள சங்கடங்களையும், பல மையங்களில் அமைப்பாளர், உதவியாளர், சமையலர் இல்லாமல் உள்ளதும், எடைக் கருவி இல்லாததால் எடைப் பதிவில் குறைவுள்ளதும், கேஸ்க்கான எரிபொருள் வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி கூறினோம். இறுதியில் இருக்கம் தளர்ந்த நமது மாவட்ட ஆட்சியர் அவர்கள் "சத்துணவு அமைப்பாளரின் பணி நீக்கத்தினையும் ரத்து செய்து பணி வழங்குவதாகவும், ஊழியர்களுக்கு உள்ள பிரச்சனைகளை நேரில் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார்கள்

**திருப்பூர் மாவட்டம்**

**தோழர் லோ.செல்வக்குமார் காங்கேயம் நகராட்சி குழாய் பொருத்துநர் அவர்களை பழிவாங்கும் வகையில் வழங்கப்பட்ட பணிமாறுதல் உத்தரவை திரும்ப பெறக்கோரி திருப்பூர் மண்டல நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மண்டல இயக்குனர் அலுவலகத்தில் மாபெரும் கண்டன முழக்கப் போராட்டம்** 14-02-2022 திங்கள்கிழமை பிற்பகல் 1:00மணியளவில் துவங்கி மாலை 6:00 மணிவரை எழுச்சியுடன் துவங்கி நடைபெற்று வந்ததுமாநில நிர்வாகிகள் தலையிட்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திருப்பூர் மண்டல இயக்குனர் அவர்களிடம் பேசியதின் அடிப்படையில்உயர்திரு மண்டல இயக்குனர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திருப்பூர் மண்டலம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மாவட்ட நிர்வாகிகளுடன் அன்று 15-02-2022 காலை 11:00 மணியளவில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பேச்சுவார்த்தையில் தோழர் லோ. செல்வக்குமார் அவர்களை பழிவாங்கும் வகையில் வழங்கப்பட்ட பணிமாறுதல் உத்தரவு திரும்ப பெறப்படும் முறையான உத்தரவு வழங்கவும் ஒரு வார காலத்தில் தீர்வு ஏற்படுத்தி தருவதாகவும் உறுதியளித்தார் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் மேற்சொன்ன உத்தரவாத்தின் அடிப்படையில் போராட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைப்பது ஒருவார காலத்தில் உரிய தீர்வு எட்டப்பட வில்லையெனில் மீண்டும் போராட்டத்தை முன்னெடுப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

**வட சென்னை மாவட்டம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வட சென்னை மாவட்ட செயற்குழு முடிவின்படி 11.02.2022 அன்று மாவட்ட நிர்வாகிகள் மருத்துவ கல்வி இயக்குனரகத்தின் கீழ் பணிபுரியும் மருத்துவகல்லூரி &மருத்துவமனையில் சில பிரிவு ஊழியர்களுக்கு மாத ஊதியம் கிடைப்பதில் மாத மாதம் கால தாமதமாகி வருகிறது .இதை சரிசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மருத்துவ கல்வி இயக்குனர் அவர்களை சந்தித்து மாவட்டத்தின் சார்பில் முறையீடு செய்யப்பட்டது. இயக்குனர் அவர்கள் மாத ஊதியம் பெறுவதில் காலதாமதத்தை களைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மருத்துவமனை முதல்வர்களுக்கும் (DEEN) உரிய உத்தரவுகள் வழங்கப்படும் என்று தெரிவித்தார்

2. மருத்துவமனையில் பணியாற்றும் அனைத்து பிரிவு ஊழியர்களுக்கும் கொரோனா ஊக்கத்தொகை கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முறையீடு செய்து உள்ளோம்.இயக்குனர் அவர்கள் பலருக்கு ஊக்கதொகை வழங்கப்பட்டுள்ளதையும் விடுப்பட்டவர்களுக்கும் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்வதாகவும் தெரிவித்தார்

**15 .2 .2022 தற்செயல் விடுப்பு இயக்கம்**

**தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பின்** சார்பில் நில அளவைப் பணிகளை முறைப்படுத்தி பணி பளுவை குறைத்திட கோரியும் காலிப் பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட 14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தியும் தமிழகம் முழுவதும் 15 .2 .2022 அன்று ஒரு நாள் தற்செயல் விடுப்பு இயக்கம் நடத்தப்பட்டது. ●



# விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த! மக்களை பாதுகாக்க !! தேசத்தை பாதுகாக்க!!

- சி. பரமேஸ்வரி

கொரோனா என்னும் தீ ஏழைகளை மேலும் ஏழைகளாக படும் பாதாளத்தில் தள்ளியுள்ளது. தொற்று நோய் மற்றும் திடீர் ஊரடங்கு ஆகிய நடவடிக்கைகள் மக்களுக்கு பன்மடங்கு துயரங்களை ஏற்படுத்தியது. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். உழைக்கும் மக்களின் வருமானம் குறைந்துள்ளது. நமது நாட்டின் செல்வத்தை உற்பத்தி செய்யும் கோடிக்கணக்கான தொழிலாளர்கள் பட்டினியில் தள்ளப்பட்டுள்ளனர். பட்டினியிலிருந்து மக்களை காப்பாற்ற வேண்டிய அரசு கடைப்பிடிக்கும் கொள்கைகளின் விளைவாக அத்தியாவசிய பொருட்களின் விலை விண்ணைத் தொடும் அளவிற்கு பாய்ந்துள்ளது. உணவு, எரிப்பொருள் மற்றும் பொருட்களின் விலைகள் உயர்வு மற்றும் விநியோக முறைகளினால் ஏற்பட்ட இடையூறுகள் மொத்த மற்றும் சில்லரை வியாபாரத்தின் பணவீக்க விகிதங்களில் தெரிகின்றன. அரிசி, சமையல் எண்ணெய்கள். பருப்பு வகைகள், காய்கறிகள், முட்டை போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. சமையல் எண்ணெய் 60% வரை மோசமான விலை உயர்வடைந்துள்ளது. ஒன்றிய அரசு மானியத்தை கடுமையாக குறைத்துள்ளதால் எரிவாயுவின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. 2019-2020 சமையல் எரிவாயுவிற்கான பணமானியம் ரூ.22,635 கோடியாக இருந்தது. ஆனால் தற்போது ரூ.3,559 கோடியாக (பிப்ரவரி 2021 வரை) குறைந்துள்ளது. இதனால் முழுசுமையும் நுகர்வோர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வுக்கு பிரதான காரணம் பெட்ரோலிய பொருட்களுக்கு மத்திய அரசு கலால் வரியை கடுமையாக உயர்த்தியது தான். கலால் வரியை உயர்த்தி சாமான்ய மக்களின் வாழ்வாதாரம் பறிக்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் அதாவது 2018 முதல் எரிபொருள் வரி மூலம் 8 லட்சம் கோடி ரூபாய் அரசு லாபம் ஈட்டியுள்ளது. ஆனால் 2020-21 ம் ஆண்டில் மக்கள் பெரும் வேலை இழப்பு மற்றும் வருமான இழப்பை எதிர்கொண்டிருக்கும் வேலையில் ஒன்றிய அரசு ரூ.3.71 லட்சம் கோடி ஈட்டியுள்ளது என்பது மிக கொடுமையானது. 2020 ஏப்ரல் செப்டம்பர் மாதங்களில் கலால் வரி வசூல் ரூ.1.26 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. 2021 ஏப்ரல், செப்டம்பர் ரூ.1.28 லட்சம் கோடியாகும். இதில் பெட்ரோல் டீசல் விலையில் 55 முதல் 58.1 ஆகும். 2014- முதல்

பெட்ரோலிய பொருட்களின் வருவாய் அரசுக்கு 138 சதவீதம் அதிகரித்துள்ளது.

பெட்ரோல், டீசல் விலை ஏற்றத்தால் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வுக்கு இட்டுச்செல்கிறது. அரசின் நலதிட்டங்களுக்கும் தடுப்பூசி திட்டத்திற்கும் பணம் தேவைப்படுவதால் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படுகிறது என்று எரிவாயு அமைச்சர் முன் வைக்கும் வாதம் போலியானது. இக்கொரோனா காலகட்டத்தில் உலகம் முழுவதும் தினந்தோறும் ஒரு கோடீஸ்வரர் உருவாகியுள்ளார். பெரும் பணக்காரர்கள் 10 பேருடைய சொத்துக்கள் 100% அதிகரித்துள்ளது. உலகில் வாழும் 2755 பெரும் பணகாரர்கள், கடந்த 14 ஆண்டுகளில் சொத்து சேர்த்ததையும் விட அதிகமான தொகையை கொரோனா பெருந்தொற்று காலத்தில் சேர்த்துள்ளார்கள். 2வது உலக போரில் இறந்த மக்களின் எண்ணிக்கைக்கு நிகரான இறப்புகள் கொரோனா பெருந்தொற்றினால் ஏற்பட்டுள்ளது. அமேசான் நிறுவன முதலாளி ஜெப் பெஜோஸ் இக்காலத்தில் சேர்த்திருக்கும் கொத்துக்களின் மதிப்பை மட்டும் கணக்கிட்டால் அது உலக மக்கள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கு ஆகும் செலவிற்;கு சமமான தொகை ஆகும். இப்படி சொத்து குவித்திருக்கும் உலகின் 10 பெரும் பணக்காரர்கள் தங்கள் சொத்துக்களை செலவு செய்வதற்கு முன் வந்தால் ஒரு நாளைக்கு 10 லட்சம் ரூபாய் செலவு செய்தாலும் கூட தீர்ந்து போக 414 ஆண்டுகளுக்கு மேல் ஆகும். தங்களின் சொத்துக்களை அமெரிக்க டாலர்களாக அடுக்கி அதன் மீது அமர்வது என்று முடிவு செய்தால் கூட அந்த உயரம் பூமியில் இருந்து நிலாவிற்குச் செல்லும் தூரத்தில் பாதியாகத் தான் இருக்கும். நாட்டின் அதிகார மையத்தோடு நெருக்கமான கூட்டு வைத்திருக்கும் அதானி, அம்பானி பொது சொத்துக்களை வேகமாக கைப்பற்றியே தனது செல்வ செழிப்பை அதிகரித்து கொண்டிருக்கிறார்கள். அரசிடம் பணம் இல்லையாம். தடுப்பூசி திட்டத்திற்கு கோடீஸ்வர கோமான்களின் சொத்துக்கள் பல்கி பெருகி கொண்டே செல்கிறது. தடுப்பூசிக்காக செலவு செய்த தொகையின் மூலம் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் இலாபம் குவித்திருக்கின்றன. ஒரு புறம் விலை வாசி உயர்வை உயர்த்தும் கொள்கையை அரசு கடைப்பிடிக்கிறது. மறுபுறம் தொற்று நோயை காரணம் காட்டுகிறது. இந்திய நாட்டில் உள்ள கோடீஸ்வரர்களில் முதல் பத்து நாபர்களுடைய சொத்துக்களை கணக்கிட்டால் ஏழை மக்களுக்கு உணவளிக்கலாம். நாட்டில் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் 25 ஆண்டுகளுக்கு உயர்கல்வி வரை இலவசமாக வழங்க ஆகும் செலவிற்கு ஈடான தொகையாக உள்ளது. 10% பணக்காரர்கள் மீது 1 % கூடுதல் வரி விதித்தால் 17.7 லட்கம் ஆக்சிஜன் சிலிண்டர்கள் வாங்க முடியும் 3 பணக்காரர்களின் சொத்துக்கள் மீது 1 % வரி விதித்தால் அனைத்து மக்களுக்கும் இலவசமாக தடுப்பூசி செலுத்தலாம். குடி மக்களின் உயிரை காப்பாற்ற முடியும், உணவளிக்க முடியும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த முடியும். விலைவாசி உயர்வு மூலம் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள தாங்க முடியாத சுமைகளை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது. அன்றாட அத்தியாவசிய பொருட்களின் விலை தானாக உயராது. அரசு செயற்கையாக உயர்த்தியது. பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் நிலபிரபுக்களின் நலன்களை அவர்களின் லாப பசியை போக்கிட எடுக்கும் நடவடிக்கைதான் இது. இதுதான் அரசின் நவீன தாராளமையத்தின் உண்மையாகும். எனவே விலை வாசி உயர்வை கட்டுப்படுத்த! மக்களை பாதுகாக்க! தேசத்தை பாதுகாக்க! 2022 மார்ச் 28,29 இல் அரசு அலுவலகங்களின் வேலைகளை நிறுத்துவோம். அகில இந்திய வேலை நிறுத்தத்தை வெற்றியடைய செய்வோம்.

●

கட்டுரை

# எட்டுத்திக்கும் பரவட்டும் போராட்டத் தீ

**- இரா. மங்களபாண்டியன்**

தேசிய பணமாக்கல் திட்டம் (National Monetisation pipeline - NMP) என்ற பெயரில் நாட்டின் மதிப்புமிக்க, உற்பத்தி வளமிக்க, உயிர்நாடியான செயல்பாட்டு கட்டமைப்புகளாக திகழ்கிற - பல லட்சக்கணக்கான கோடி ரூபாய்கள் பெறுமானமுள்ள பொதுத்துறை சொத்துக்களையெல்லாம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கு விற்றுத்தீர்ப்பது என்று ஒன்றிய அரசு முடிவெடுத்துள்ளது.

இந்த திட்டம், சர்வதேச நிதி மூலதனத்தால் இயக்கப்படுகிற நவீன தாராளமயக் கொள்கையின் மிகப்பெரிய நடவடிக்கையாகும். தேசிய பணமாக்கல் திட்டம் என்பது, பொதுச் சொத்துக்களை தனியார் கைகளுக்கு மாற்றிவிடும் போது மிகப்பெரும் அளவிற்கு ஊழல் கரைபுரண்டு ஓடுவதற்கான திட்டமே ஆகும். இது தேசத்தின் பொருளாதாரத்தை அழித்தொழிக்கும், தொழிலாளர்களுக்கும் உழைக்கும் மக்களின் இதர பல்வேறு பகுதி மக்களுக்கும் தாங்க முடியாத அளவுக்கு துன்பங்களை கொண்டு வரும் திட்டமாகும்.

ஆகஸ்ட் 23,2021 அன்று ஒன்றிய நிதி அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ள தேசிய பணமாக்கல் திட்டமானது, 26,700 கிலோமீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகளை தனியார் கார்ப்பரேட் கூட்டுக்களவாணி கம்பெனிகளுக்கு தாரை வார்க்க உள்ளது. இந்த சாலைகளின் மதிப்பு ரூ.1.6லட்சம் கோடி ஆகும். அதேபோல 400 ரயில் நிலையங்கள் மற்றும் 150 ரயில்கள் (ரூ1.5லட்சம் கோடி); 42,300 மின் திட்ட கிலோமீட்டர் தூரம் மின்சார பகிர்மான லைன்கள் (ரூ0.67லட்சம் கோடி); 5 ஆயிரம் மெகாவாட் நீர்மின், சூரிய மின் மற்றும் காற்றாலை மின்சார உற்பத்தி சொத்துக்கள் (ரூ.3லட்சம் கோடி), 8 ஆயிரம் கிலோமீட்டர் தூரமுள்ள தேசிய இயற்கை எரிவாயு பைப்லைன்கள் (ரூ0.24லட்சம் கோடி) 4 ஆயிரம் கி.மீ இந்தியன் ஆயில் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் பைப்லைன்கள் (ரூ0.22 லட்சம் கோடி), பி.எஸ்.என்.எல் மற்றும் எம்.டி.என்.எல் தொலைத்தொடர்பு கோபுரங்கள் (ரூ.39 லட்சம் கோடி), 21 விமான நிலையங்கள் மற்றும் 31 துறை முகங்கள் (ரூ.0.34 லட்சம் கோடி), 160 நிலக்கரி சுரங்கத் திட்டங்கள் (ரூ.0.32 லட்சம் கோடி) மற்றும் 2 விளையாட்டு ஸ்டேடியங்கள் (ரூ.11 லட்சம் கோடி) உள்ளிட்ட மாபெரும் சொத்துக்களை தனியார் கார்ப்பரேட் கூட்டுக் களவாணிகளுக்கு தாரைவார்க்க உள்ளது. ஒட்டுமொத்தமாக ரூ.6லட்சம் கோடி அளவிற்கான தேசிய வளங்களை தனியாருக்கு விற்பது என அதிகாரப்பூர்வமாகவே ஒன்றிய அரசு அறிவித்துவிட்டது. ஒன்றிய நிதி அமைச்சரும், நிதி ஆயோக் அமைப்பும் நாட்டின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேலும் வளர்ப்பதற்காகவே இத்தகைய விற்பனையை மேற்கொள்வதாக கூறியிருப்பது முற்றிலும் மோசடியானது. அவர்கள் கூறுவதற்கு மாறாக தங்களது தனியார் கார்ப்பரேட் எஜமானர்கள் கொழுத்த வருமானம் ஈட்டுவதற்காகத்தான் இந்த மாபெரும் தேசிய அடிப்படைக் கட்டமைப்பு சொத்துக்களை விற்க இருக்கிறார்கள். அந்த எஜமானர்கள் இந்த நிறுவனங்களில் எந்தவொரு சிறு மூலதன நிதியும் செலவழிக்காமல் பெரும் லாபத்தை ஈட்டப்போகிறார்கள். இது தேசத்தின் வளங்களை பகிரங்கமாக சூறையாடுவதற்கு வழிவகுக்கும்.

அடிப்படைக் கட்டமைப்பு சார்ந்த துறைகளில் முதலீடுகள் செய்வதற்கு பதிலாக, வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள், தேசிய பணமாக்கல் திட்டத்தின் வழியாக பெரும் நிறுவனங்களை தங்கள் வசப்படுத்துகிறார்கள். தேசத்தின் அடிப்படைக்

கட்டமைப்பு சொத்துக்களாக இருக்கும் பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துக்களை பணமாக்குகிறோம் என்ற பெயரில் நடக்கும் இந்த சுரண்டலின் மூலமாக மிகப்பெரும் அளவிலான செல்வம் தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களின் கைகளுக்கு மடைமாற்றம் செய்யப்படவுள்ளது.

அரசுத் தரப்பில் முதலில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பினைத் தொடர்ந்து அடுத்தடுத்து பல சலுகைகள் அறிவிக்கப்படுவது உறுதி. கடந்த கால அனுபவங்கள் இதைத்தான் காட்டுகின்றன. முதலில் வெளியிட்ட அறிவிப்புக்கு தனியாரிடமிருந்து ஆதரவு கிடைக்கப்பெறவில்லை என்று கூறி சொத்துக்களை வாங்குவோரை ஈர்ப்பதற்காக விதிகளை மேலும் தளர்த்தி புதிய புதிய அறிவிப்புகளை அரசு வெளியிடும் என்று தெரிகிறது.

பாதுகாப்பு கையகப்படுத்துதல் கொள்கை 2020 (Defense Acquisition Policy 2020) - பாதுகாப்பு உற்பத்தி துறையில் தனியார் மயத்தை திணிப்பதற்காகவே உருவாக்கப்பட்டது. இதில் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்துறை - தனியார் பங்கேற்பின் பாதுகாப்பு கூட்டு (Strategic Partnership) சண்டை விமானங்கள், ஹெலிகாப்டர்கள், நீர்முழ்கிகள், டாங்கிகள் உள்ளிட்ட முன்கள கவச வாகனங்கள் போன்ற மிக முக்கிய நான்கு பிரிவுகளில் அனுபவம் இல்லாத தனியார் நிறுவனங்களுடன் பொதுத்துறை நிறுவனங்களை இணைத்துப் பங்கேற்கச் செய்வதன் மூலம் பொதுத்துறையையும் பின்னர் விழுங்கி ஏப்பம் விட அனுமதிக்கும் நாசகரக் கொள்கையாகும். கடந்த 04.06.2021 அன்று மோடி அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு கையகப்படுத்துதல் கவுன்சில் (Defense Acquisition Council) - பாதுகாப்பு கூட்டாண்மை மாதிரியின் கீழ் ரூ.43,000 கோடி மதிப்புள்ள ஆறு நீர்முழ்கிக் கப்பல்களைக்கட்டும் திட்டத்திற்கு லார்சன் அண்ட் டுப்ரோ தனியார் கம்பெனி மற்றும் பொதுத்துறை கப்பல் கட்டும் நிறுவனமான மும்பை மசகான் டாக் ஷிப் பில்டர்ஸ் லிட் (Mazagon Dock Ship Builders Ltd) ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் ஒப்புதல் அளித்துள்ளது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஸ்தாபனம் (DRDO) மற்றும் அதன் உள்நிறுவனங்கள் பொதுத்துறை பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்கள் (Public Sector Defense Units) மற்றும் ஆயுதத் தொழிற்சாலை வாரியம் (Ordinance Factory Board) அதன் 41 இணைப்பு ஆயுதத் தொழிற்சாலைகள் - இவை அனைத்தின் ஆயுத உற்பத்திகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் பாதுகாப்புத்துறையின் நேரடி கட்டுப்பாட்டில் நடைபெற்று வந்தன. ஆனால் 16.06.2021 அன்று 41 பாதுகாப்பு உற்பத்தி தொழிற்சாலைகளை ஏழு நிறுவனங்களாக மாற்றும் திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்து நமது வரலாற்று சிறப்பு மிக்க ஆயுதத் தொழிற்சாலை வாரியத்தை (Ordinance Factor Board) ஒழித்துக்கட்டும் வேலையை துவக்கிவைத்துள்ளது.

நமது பாதுகாப்புத் துறைக்கு நவீன ஆயுதங்கள் மற்றும் கருவிகளை அளிக்க வேண்டும் என்பது சரியே. ஆனால் நமது பொதுத்துறை ஆயுத உற்பத்தி நிறுவனங்களை நவீனமாக்காமல் திட்டமிட்டு ஒழித்துக்கட்டுவதும், இவற்றின் ஆயுத உற்பத்தியை தனியார் வசம் ஒப்படைப்பதும் எதிர் விளைவுகளையே உருவாக்கும் என்பதோடு ஆசிய பிராந்தியத்தில் ஆயுத போட்டியையும், பதற்றங்களையும் உருவாக்கும். நாட்டின் எதிர்கால அமைதிக்கு கேடு விளைவிக்கும். நமது சமூக முன்னுரிமைகளை பின்னுக்குத்தள்ளும்.ஒன்றிய அரசின் இத்தகைய தேசவிரோத திட்டத்தை கடுமையாக கண்டனம் செய்வதற்கும், உறுதியாக போராடி தேசத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஏகபோகங்களின் கைகளுக்கு இந்த சொத்துக்கள் ஒப்படைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்திடவும் நாட்டின் தொழிலாளர்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் ஒன்றுபட்டு எதிர்வரும் மார்ச் 28, 29 தேதிகளில் நடைபெறவுள்ள அகில இந்திய வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்க வேண்டிய பொறுப்பு நமக்குள்ளது. அதனை அனைவரும் ஒன்று கூடி முழுமையாக நிறைவேற்றுவோம். ●

# பாதுகாப்பைத் தேடும்... உணவு பாதுகாப்பு அலுவலர்கள்!!

- அ.தி.அன்பழகன்

சமீபத்தில் தமிழ் மாநில உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சங்கம் சார்பில் பணிப்பாதுகாப்பு கோரி கோரிக்கை அட்டை அணிந்து பணி செய்தோம்.

அதில் " கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் பணிபுரிந்து வரும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் அனைவருக்கும் பணி விதியில் விடுபட்டுள்ள "உணவுபாதுகாப்பு தரங்கள் சட்ட விதிகள் 2006 ஒழுங்கு முறைகள் 2011" ல் வழங்கப்பட்டுள்ள பணி பாதுகாப்பை வழங்க வேண்டும்" என்ற கோரிக்கையை வலியுறுத்தி இருந்தோம்.

இந்த கோரிக்கை அட்டையுடன் பணிசெய்த பல உணவு பாதுகாப்பு அலுவலர்களை "சார்! நீங்கள் நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்ட அரசு ஊழியர் இல்லையா? பின்னர் எப்படி ஒரு மத்திய சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரியாக தொடர்கின்றீர்கள். நீங்கள் உணவு பகுப்பாய்வுக்காக எடுத்து அனுப்பி வைக்கும் உணவுமாதிரியை அனுப்ப சட்டபூர்வமான அதிகாரம் பெற்றவரா? தங்களால் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் செல்லுபடியாகுமா? " என்று கேட்டார்கள்.

ஆம். நண்பர்களே!

இப்பூவுலகில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் உயிர் வாழ / இயங்க/ செயல்பட/ இனப்பெருக்கம் செய்திட/ அன்றாட பணிகளை செய்திட/ சக்திபெற உணவு அத்தியாவசியமான ஒன்று. உணவு இல்லையென்றால் அனைத்து உயிரினங்களும் அஸ்தமனமாகிவிடும். மனிதனைத் தவிர்த்த அனைத்து உயிர்களும் தனது உணவை தானே தேடிக்கொள்கின்றன. “அப்படியே சாப்பிடுவேன்” எனத்தான் அனைத்து உயிரினங்களும் இருக்கின்றன. தேனீக்கள் போன்ற சிலவற்றைத்தவிர அனைத்தும், கிடைக்கும் உணவை பக்குவப்படுத்தியோ மாற்றம் செய்தோ அவை உண்ணுவதில்லை. ஆனால், மனித இனம் ஒரு சமூகப்பிராணி என்ற அடிப்படையில் தனக்கான உணவு தேவைக்கு, தன் சமூகத்தை நம்பி இருக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் தன் உணவிற்கு இதர மனிதர்களை / உயிரினத்தை நம்பி செயல்பட வேண்டியுள்ளது.

மனிதன் இயற்கையாக கிடைக்கும் உணவை மட்டும் உண்ணாமல் அதனை மாற்றி பக்குவப்படுத்தி உருமாற்றம் / சுவை மாற்றம் செய்து தன் உணவை உண்ணுகின்றான். மனிதன் தன் ஆறாவது அறிவை உபயோகித்து செய்யும் செயல்களில் தன் வசதிக்காக செய்யப்படும் வேலைகளில், தன் தனிப்பட்ட லாபத்திற்காக பல்வேறு முறைகேடுகளிலும் ஈடுபடுகின்றான்.

அப்படிப்பட்ட முறைகேடுகளைத் தடுத்து, தன் சக மனித இனத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும், தன் இன நலனுக்காக மனிதன் ஏற்படுத்திக்கொண்ட அரசுகளின் கடமையாகும். அந்த வகையில் நம் இந்திய அரசும் தன் நாட்டு மக்கள் நல்ல, பாதுகாப்பான உணவை பெறவேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு சட்டதிட்டங்களை, விதிகளை வகுத்து செயல்படுத்தி வருகின்றது.

அந்த அந்த பகுதியில் / நாட்டில் கிடைத்த உணவைமட்டும் பயன்படுத்தி வந்த மக்கள் அறிவியல் வளர்ச்சியால் / போக்குவரத்து வசதிகளால் பல பகுதிகளிலிருந்து / பல நாடுகளிலிருந்து கிடைக்கும் உணவை பயன்படுத்த ஆரம்பித்ததன் விளைவாய் தெரிந்தோ, தெரியாமலோ கேடு விளைவிக்கும் உணவை உண்டு, தன் நாட்டு மக்கள் கேடுகளைப் பெற்றுக்கொள்ள கூடாது என்ற

அடிப்படையில், அனைத்து நாடுகளுக்கும் பொதுவான சட்டம் தேவைப் பட்டது. இந்தியாவில் அந்த தேவையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்டம்தான் " உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் 2006 மற்றும் விதிகள் 2012" ஆகும். இந்தியா முழுமைக்கும் 05.08.2011 முதல் மேற்படி சட்டம் எந்த மாநிலத்திற்கும் விதிவிலக்கின்றி அமல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த சட்டம் வருவதற்கு முன்னால் உணவு தொடர்பாக "உணவு கலப்பட தடைச்சட்டம் 1954" உட்பட பல்வேறு சட்டங்கள் இந்தியாவில் அமல்படுத்தப்பட்டுவந்தது. சர்வதேச அளவில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, உணவு தொடர்பாக நடைபெறுவதால், அப்படி விற்பனை செய்யப்படும் உணவுகளின் தரத்தை மதிப்பீடு செய்திட / தவறு நடைபெறும்பட்சத்தில் தண்டனை வழங்கிட / பாதுகாப்பான உணவு மக்களுக்கு கிடைத்திட இச்சட்டம் வழிவகை செய்கின்றது. இதற்குமுன்னர் அமல்படுத்தப்பட்ட உணவு கலப்பட தடைச் சட்டம் உள்ளிட்டவை, குற்றம் கண்டறிந்து தண்டனை வழங்குவது குறித்தே குறிக்கோளாக கொண்டிருந்தது. ஆனால் தற்பொழுது அமல்படுத்தப்பட்டிருக்கும் உணவு பாதுகாப்பு சட்டம் குறைபாடுகளை கண்டறிந்து தண்டனை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பாதுகாப்பான உணவு மக்களுக்கு கிடைப்பது தொடற்பான ஆலோசனைகளை / வழிமுறைகளை உருவாக்கித் தருவதாகவும் உள்ளது.

உணவு விற்பனையாளர்கள் தரமான பாதுகாப்பான உணவை விற்பனை செய்திடவும், உபயோகிப்பாளர்கள்/ நுகர்வோர் பாதுகாப்பான உணவை பெற்றிடவும், சந்தேகமிருப்பின் உணவு மாதிரியை எடுத்து பரிசோதனைக்கு அனுப்பி அதன் முடிவின் அடிப்படையில் வழக்கு தொடர்ந்து உரிய நிவாரணம் பெற்றிடவும் இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. உணவு விற்பனை நிலையங்களில் விற்கப்படும் உணவை வாங்கி சாப்பிட்டதால் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில், பாதிப்பிற்கு தக்கபடி இழப்பீடு பெறுகின்ற உரிமையை இச்சட்டம் வழங்கியுள்ளது. அந்த இழப்பீட்டை வழங்க வேண்டிய கடமையை அரசுக்கு பணித்துள்ளது. இந்தியா முழுமைக்கும் இச் சட்டத்தை அமல்படுத்த இந்திய தேர்தல் ஆணையம் போல தன்னாட்சி பெற்ற "உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம்" ஏற்படுத்தப்பட்டு, அது உணவு தொழில் சார்ந்தோர், அறிவியலாளர்கள் மற்றும் மத்திய அரசின் பல்வேறு துறை அதிகாரிகள் கொண்ட குழுவால் நடத்தப்பட்டு வருகின்றது. அவ்வப்போது ஆய்வுகளின் அடிப்படையில் மாற்றங்களை இச்சடத்தில் செய்திட இந்த ஆணையம் அதிகாரமளிக்கப்பட்டதாகும்.

மாநில அளவில் இச் சட்டத்தை அமல்படுத்த மாநில ஆணையர், மாவட்ட நியமண அலுவலர் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் உள்ளிட்ட பல அலுவலர்கள் பணிசெய்து வருகின்றனர். தமிழகத்தில் இச்சட்டத்தை அமல்படுத்த மக்கள் நல்வாழ்வுத்துறையின் கீழ் "உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை" 05.08.2011-ல் புதிதாக ஏற்படுத்தப்பட்டு, அதில் உணவு பாதுகாப்பிற்கென பிரத்தியேகமாக இந்திய ஆட்சிப்பணி அதிகாரி ஒருவரை மாநில ஆணயராகக்கொண்டு இத்துறை செயல்பட்டு வருகின்றது. தமிழகம் முழுவதும் வட்டாரம், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கான பகுதியில் தயரிக்கப்படும், விற்கப்படும் உணவு , அரசு நிறுவனங்கள், அலுவலகங்கள் உள்ளிட்டவற்றில் விற்கப்படுபவை மற்றும் இலவசமாக விநியோகிக்கப்படும் உணவு உள்ளிட்ட அனைத்தையும் கண்காணிக்க வேண்டிய பொறுப்பும், தேவையின்போது, உணவு மாதிரி எடுத்து அனுப்பி, அதில் தவறு நடந்திருக்கும்பட்சத்தில், சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பது மற்றும் உணவு நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குவது போன்றவை இவர்கள் பணிகளாகும்.

இச்சட்டத்தை அமல்படுத்தும் பொறுப்பில் உள்ள இவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டிய குறைந்தபட்ச வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென இவர்கள் கடந்த பத்து ஆண்டுகளாக விரும்புகின்றனர். அதற்கான கோரிக்கைகளை அரசுக்கு தெரிவித்து, அரசு செயலாளர் இரண்டு முறை பேச்சுவார்த்தை நடத்தி, இவர்கள் கோரிக்கைகளை ஒப்புக்

கொண்டு கூட்ட நடவடிக்கை குறிப்புகளும் அதிகாரப்பூர்வமாக வழங்கியுள்ளார். ஆனால் அவை கடந்த பத்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படவில்லை. உணவு விற்பனையாளர்கள் மற்றும் பொதுமக்கள் எளிதில் அணுகும் விதத்தில் உணவு பாதுகாப்பு அலுவலர் அலுவலகம் அமைந்திட வேண்டும் (தற்போது ஆணையராக இருக்கும் முனைவர் பி.செந்தில்குமார், இ.ஆ.ப இதற்கான முயற்சிகளை சமீபத்தில் ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மற்றும் மாநகராட்சி உள்ளிட்ட அரசு அலுவலகங்களில் உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு அலுவலக இடம் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளார். ஆனால், அரசின் பல அலுவலகங்கள் இடப் பற்றாக்குறையில் உள்ளதாக கூறி உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு அலுவலக இடம் தர மறுக்கின்றனர்) ஒரு கிராம நிர்வாக அலுவலர் ஒரே ஒரு வருவாய் கிராமத்தை நிர்வகிக்கின்றார். அவருக்கு இரண்டு உதவியாளர் உள்ளனர். வட்டாரம் / வட்ட அளவில் சட்டபூர்வமான பணியை மேற்கொள்ளும் உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு உதவியாளர் பணியிடம்கூட இல்லை என்பதும் இதனால் சட்டபூர்வமான பணியை மேற்கொள்ளும் பொழுது (தடைசெய்யப்பட்ட / காலாவதியான பொருட்களை கைப்பற்றிடும் போது, அதிலும் வாகன வசதி ஏதுமின்றி அவற்றை அலுவலகங்களுக்கு கொண்டு சேர்க்க இவர்கள் படும் பாடு சொல்ல இயலாதது.) அதிலும் ஏதாவது ஆபத்து வரும்போது, உரிய இடத்தில் தகவல் சொல்லக்கூட ஆட்கள் இருக்காது. இணையத்தில் அவ்வபோது (ஒரே நாளில் பலமுறை) கேட்கப்படும் விபரங்களை உரிய அலுவலருக்கு கொண்டு சேர்க்க / புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க இணையதள வசதி, அதற்கான குறைந்தபட்சம் செல்லிடப்பேசி வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாமலேயே சொந்த பணத்தை செலவழித்து அரசுப் பணிகளை செய்து வருகின்றனர்.

அனைத்திற்கும் மேலாக, சுகாதார ஆய்வாளர்களாக / துப்புரவு ஆய்வாளர்களாக பணி செய்தவர்கள், உணவு ஆய்வாளர்களாக பணி செய்து, இப்புதிய சட்டத்தின்படி மட்டுமே கடந்த 05.08.2011-ல் உணவு பாதுகாப்பு அலுவலர்களாக அரசு கெஸட்டில் அறிவிக்கை செய்யப்பட்டு, சட்ட விதிகள்படி நியமனம் செய்யப்பட்டு, பத்தாண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிவரும் இவர்கள், அதற்குறிய பணிகளை சட்டச் சிக்கல்கள் இல்லாமல் பணியாற்ற, உணவு பாதுகாப்பு அலுவலர்கள் அரசுப் பணிவிதி உருவாக்கப்பட்டபோது, ஏற்கனவே உணவு பாதுகாப்பு அலுவலர்கள் பணியை பத்தாண்டுகளுக்கு மேலாக செய்துவரும் இவர்களுக்கு பணி விதியில் பாதுகாப்பு (சேவிங் கிளாஸ்) வழங்கப்படவில்லை. இதுகுறித்து பலமுறை கடந்த ஆட்சிக்காலத்தில் மனு கொடுத்து, அரசுச் செயலாளர் ஒத்துக்கொண்டு கூட்ட முடிவை வழங்கியும், சட்டபூர்வமான பணிகளை முறைப்படி அரசு அறிவிக்கை மற்றும் பணி நியமனம் செய்யப்பட்டிருந்தும், கடந்த ஆட்சியின் ஏதோ ஒரு எதிர்பார்ப்பை நிறைவேற்றாததால் இவர்களுக்கு பணிப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் உயர்திரு மா.சுப்பரமணியன் அவர்கள் கொரோனா தடுப்புப் பணிகளில் தொடர்ந்து இரவு பகல் பாராமல் உழைத்து வருவதால், அவரின் நேரடி கவனத்திற்கு இந்த பணி பாதுகாப்பு இல்லாத நிலை குறித்து கொண்டுசெல்லப்படவில்லை. ஆனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சட்டமன்ற உறுப்பினர் குழுத் தலைவரும், நாகை மாவட்டம், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினருமான உயர்திரு. வி.பி.நாகைமாலி அவர்கள், கடந்த வாரம் மாண்புமிகு அமைச்சரை சந்தித்து உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு பணி விதியில் பாதுகாப்பு வழங்க வலியுறுத்தி நேரில் சந்தித்து மனுவளித்து பேசினார். மாண்புமிகு அமைச்சரும் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

மேற்கண்ட தோழர் வி.பி.நாகைமாலி அவர்களின் கோரிக்கை மற்றும் தற்போதைய மாநில உணவு பாதுகாப்பு ஆணையர் முனைவர். பி. செந்தில்குமார் அவர்கள் விரைவில் இந்த பணிப் பாதுகாப்பு இல்லாத நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக சங்க மாநில

நிர்வாகிகளிடம் வாக்குறுதி வழங்கி இருப்பதும் நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் கீழ் செயல்படும் பொது சுகாதாரத் துறையில் மருத்துவமனை பணியாளராக சேரும் ஒருவர் சுகாதார ஆய்வாளர் பயிற்சி பெற்று, சுகாதார ஆய்வாளர், வட்டார சுகாதார மேற்பார்வையாளர், துணை இயக்குநரின் நேர்முக உதவியாளர் உள்ளிட்ட பதவி உயர்வுகளை பெற்றிட வாய்ப்பு உள்ளது.

அதே மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் உணவு பாதுகாப்புத் துறையில் தற்போது உணவு பாதுகாப்பு அலுவலர்களாக செயல்பட்டு வருபவர்கள், சட்ட விதிகளின்படி மட்டுமே நியமிக்கப்பட்டனர்.

அதற்கு முன்பு பொது சுகாதாரத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் பேரூராட்சி நிர்வாகங்களில் சுகாதார ஆய்வாளர், வட்டார சுகாதார மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலர்களாக பணியாற்றி, கூடுதல் பணியாக 05.08.2011-க்கு முன்பு அமலில் இருந்த உணவு கலப்பட தடைச் சட்டம் 1954-ன்படி, சட்டத்தில் கண்டுள்ள வேதியியல் சார்ந்த பட்டப் படிப்பு படித்திருந்ததால், மேற்கண்ட சட்டத்தில் கண்டுள்ள தகுதியின்படி, உணவு ஆய்வாளர் பயிற்சி முடித்து உணவு ஆய்வாளர்களாக பணிபுரிந்தனர். மேற்கண்ட சட்டபூர்வமான தகுதியுடன் பணிபுரியும் உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு எந்தவொரு பதவி உயர்வு வாய்ப்பும் உணவு பாதுகாப்பு துறையில் வழங்கப்படவில்லை.

இவர்களில் தற்போதைய பலர் இன்னும் மூன்று மாதங்களில் அரசுப் பணியில் இருந்து ஓய்வுபெறவுள்ளனர் (ஏற்கனவே பலர் எந்தவொரு பதவி உயர்வு வாய்ப்பும் பெறாமல் ஓய்வுபெற்று சென்றுவிட்டனர்) இத்தனைக்கும் உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம் மற்றும் துறையின் முதன்மைச் செயலாளர் உணவு பாதுகாப்பு அலுவலர்களாக பணியாற்றி வருபவர்களுக்கு உரிய பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரையும் செய்துள்ளனர். சுகாதார ஆய்வாளர் நிலை 2-ஆக அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அளவில் பணிபுரிபவர்கள் களப் பணியில் உதவிட தற்காலிக பணியாளர்கள் உள்ளனர். வட்டார அளவில் பணிபுரியும் சுகாதார ஆய்வாளர் நிலை 1 மற்றும் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் பணியில் உதவ சுகாதார ஆய்வாளர் நிலை 2 மற்றும் தற்காலிக பணியாளர்கள் உள்ளனர். இவர்களுக்கான கல்வித் தகுதி என்பது மேல்நிலைக் கல்வி மற்றும் பயிற்சியாகும். அதேநேரம் மேற்கண்ட தகுதிகளோடு பட்டப் படிப்பை முடித்து, சட்டபூர்வமான பயிற்சியும் பெற்று, வட்ட, வட்டார மற்றும் நகராட்சி அளவில் பணியாற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு உதவ ஒரேயொரு உதவியாளர் கூட இல்லை. இவர்களே அலுவலக உதவியாளர், இளநிலை உதவியாளர், டேட்டா என்ட்ரி ஆபரேட்டர், காவல்துறை ஆய்வாளர் பணி போன்ற அனைத்து விதமான பணிகளையும் செய்துகொண்டு, உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் செயல்படுத்தும் பத்துக்கும் மேற்பட்ட திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றனர். அதில் இந்திய அளவில் பல்வேறு பாராட்டுகளை / பரிசுகளை தமிழ்நாடு பெற்றிட காரணமாக இருந்து வருகின்றனர்.

இந்த சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், துறையின் உயர் அவர்களும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் பிரச்சனைகளை கருணையுடன் அனுகி அவர்களுக்கு உரிய பதவி உயர்வு வாய்ப்பும் குறைந்த பட்சம் தற்காலிக அடிப்படையில் ஒரு உதவியாளர் மற்றும் குறைந்தபட்ச கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி இவர்கள் பணியில் உள்ள நிச்சயமற்ற நிலைமையை போக்குவார்கள் என எதிர்பார்க்கின்றனர். கடந்த ஆட்சியில் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட பல அநீதிகளை கலைந்து நடவடிக்கை எடுத்து வரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் வழியில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் நடவடிக்கை எடுத்து உணவு பாதுகாப்பு அலுவலர்கள் பணிப் பாதுகாப்பு அச்சத்தை போக்குவார் என்று உணவு பாதுகாப்பு அலுவலர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்து காத்துக் இருக்கின்றனர். ●

கட்டுரை

# ஹிஜாப் சர்ச்சையும் மத அரசியலும்

- சி.கலைச்செல்வி

கர்நாடக மாநிலம் உடுப்பி மாவட்டத்தில் கடந்த மாதத்தில் ஒரு அரசுப் பள்ளியில் ஹிஜாப் அணிந்த மாணவியரை பள்ளிக்குள் அனுமதிக்காமல் தடுக்கப்பட்டதும், அதனையடுத்து அந்த மாநிலம் முழுவதும் பள்ளி, கல்லூரிகளில் வெடித்த கலவரங்களும் நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஹிஜாப் அணிவதற்கு ஆதரவும் எதிர்ப்புமாக நாடு முழுவதும் விவாதங்கள் எழுந்துள்ள நிலையில் நாமும் இதுபற்றி உரையாட வேண்டியது அவசியமாகிறது.

**பெண்கள் மீதான மதங்களின் ஆதிக்கம்**

இந்து, கிறிஸ்துவம், இஸ்லாம் உள்ளிட்ட எல்லா மதங்களும் பெண்களை இரண்டாம் தரமாக நடத்தவே போதிக்கின்றன. ஆணாதிக்க சமூகத்தைக் கட்டமைக்க மதங்கள் அடித்தளம் இடுகின்றன. ஒரு பெண், வீட்டில் அல்லது குடும்பத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், சமூகத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், ஏன்ன ஆடை அணிய வேண்டும், ஏப்படி நிற்க வேண்டும், உட்கார வேண்டும் என்பதில் தொடங்கி எண்ணற்ற கட்டுப்பாடுகளை மதங்கள் வரையறைக்கின்றன.

இவற்றையெல்லாம் மீறி, தளைகளை அறுத்து பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின் இப்போதுதான் ஒரு நூற்றாண்டாக சிறிது சிறிதாக பெண்கள் சமூகத்தில் மேலெழுந்து வரக்கூடிய நிலைமை சாத்தியமாகியிருக்கிறது. அதிலும் குறிப்பாக இந்திய சமூகத்தில் பெண்கள் இரண்டு தலைமுறையாகத் தான் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் காலடி எடுத்து வைத்திருக்கின்றனர். அதற்குள் மீண்டும் அவர்களை அச்சுறுத்தி வீடுகளுக்குள் முடக்கும் ஆபத்தான அரசியல் பல்வேறு வடிவங்களில் கட்டவிழ்த்து விடப்படுகிறது.

**மத அரசியல் படுத்தும் பாடு**

இந்திய மக்களை மதரீதியாகப் பிளவுபடுத்தி பெரும்பான்மை இந்து மக்களின் வாக்குகளைப் பெறுவதையே இலக்காகக் கொண்டு செயல்படும் ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தள், விஷ்வஹிந்து பரிஷத் போன்ற இந்து அடிப்படைவாத அமைப்புகள் தங்கள் இந்துத்வா நிகழ்ச்சி நிரலை கடந்த ஏழு ஆண்டுகளாக ஆட்சி அதிகாரத்தின் மூலம் விரிவுபடுத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாகவே, தங்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பொருளாதார, சமூக வளர்ச்சி குறித்துப் பேசுவதற்கு உருப்படியாக ஒன்றுமில்லாத நிலையில், மீண்டும் வாக்குகளைப் பெற வேண்டுமென்றால் மத உணர்வைத் தூண்டி, மதப் பெரும்பான்மையை நிலைநிறுத்துவதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைக்க முயல்கின்றனர்.

இந்துத்வ அமைப்புகளின் இந்த மத அரசியல் தற்போது தன் கிளைகளை தென்னிந்தியாவின் பக்கமும் பரப்ப முயல்கிறது. கர்நாடகா அதற்காள களமாக திட்டமிட்டு பயன்படுத்தப்படுகிறது. உடுப்பியில் முதன்முதலாக ஒரு பள்ளிக்கூடத்தில் ஆரம்பித்த ஹிஜாப் எதிர்ப்பு, அந்தப் பள்ளி நிர்வாகப் பொறுப்பில் உள்ள பாஜக எம்.எல்.ஏ மூலம் திட்டமிட்டு நடத்தப்பட்டது என்பதை அங்குள்ள முற்போக்கு பத்திரிகையாளர்கள் அம்பலப்படுத்தியுள்ளனர். ஒரு பள்ளியில் நிகழ்ந்த ஹிஜாப் எதிர்ப்பு அடுத்த இரு நாட்களுக்குள் மாநிலம் முழுவதுமுள்ள பள்ளி கல்லூரிகளுக்கு தீ போல் பரவியது தற்செயலாக நிகழ்ந்ததல்ல.

**பிற்போக்குவாதிகளின் சீருடை வாதம்**

ஹிஜாப் பிரச்சினையைக் கிளப்பியுள்ளவர்களும் அதன் ஆதரவாளர்களும் கல்வி நிலையங்களில் சீருடைதான் அணிய வேண்டும், ஹிஜாப் அணிந்து வரக்கூடாது என்கின்றனர். நால் வருணங்களைப் படைத்து சாதிய அடுக்குகளைக் கட்டமைத்து காத்து வருபவர்கள், இந்த பிரச்சினையில் மட்டும் அனைவரும் சமம், மாணவர்களிடையே சீருடைதான் சமத்துவத்தை ஏற்படுத்தும் என்று பேசுவது நகைப்புக்குரியது. முற்போக்கு சிந்தனையாளர்கள் எப்போதுமே தனிமனித சுதந்திரத்திற்கு மதிப்பளித்து அவரவர் அடிப்படை உரிமைகளை உறுதி செய்வதில் முன்னிற்பவர்கள். எனவே மத அடிப்படைவாதிகள் நேரத்திற்கு ஏற்றாற்போல சமநீதி பேசுவது போலியானது மட்டுமல்ல, மக்களை ஏமாற்றுவதற்காகவே.

இந்த நேரத்தில் மதச்சார்பற்ற சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து மனித நேயம் காக்க ஒருமித்த குரலை உரக்க ஒலிப்பது அவசியமானதாகும். பாராளுமன்றத்தில் தமிழக உறுப்பினர்கள் அப்பணியை செவ்வனே செய்துள்ளது நாம் பெருமைப்படத்தக்கதாகும். மேலும் முஸ்கான் என்ற மாணவியின் உயர்ந்த இடது கரமும் சமூக ஒதுக்கலுக்கும், கல்வி பறிப்பு சதிகளுக்கும், பெரும்பான்மை அடக்குமுறைக்கும், எதிராக தனித்து நேர் நின்று ஓங்கி ஒலித்த உரிமைக் குரல், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ள அனைவருக்கும் எதிர்காலத்தின் நம்பிக்கை ஒளிக்கீற்றை மின்னச் செய்துள்ளது. ●




# மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம்

- சி. கலைச்செல்வி

1905 முதல் 1918 வரை ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு மேல் மேற்கத்திய நாடுகளில் பஞ்சாலைகளிலும், தொழிற்புரட்சியினால் உருவான பல்வேறு தொழிற்சாலைகளிலும் வேலை செய்த பெண்களின் வீரஞ்செறிந்த போராட்டங்கள் உலகம் முழுவதும் பரவி பெண்களின் உலகளாவிய கூட்டமைப்பு உருவாவதற்கும், சர்வதேச மகளிர் தினமாக மார்ச் 8ஆம் நாளை ஆண்டுதோறும் அனுசரிப்பதற்குமான வரலாறு தொடங்கப்பட்டது. இன்றைய தினம் நூற்றாண்டுகளைக் கடந்து அனுசரிக்கப்பட்டு வரும் மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம் பெண்கள் இன்னும் கடக்க வேண்டிய பாதையை நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

**பெண் விடுதலை நோக்கிய பயணம்**

விடுதலை என்ற வார்த்தைக்கு அடக்கி வைக்கப்பட்ட உணர்வுகளின் ஒட்டுமொத்த சுதந்திரம் என்று பொருள் கொள்ளலாம். இடத்திற்கு இடம் குடும்பத்திற்குள்ளும், உறவுகளுக்குள்ளும் கூட இது மாறுபடுகிறது. நம் நாடு ஆங்கிலேயரின் காலனி ஆதிக்கத்திலிருந்து சுமார் 300 ஆண்டு கால அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்று 75 ஆண்டுகள் நிளைவடைந்துவிட்டது. நாட்டின் மக்கள்தொகையில் சரிபாதியாக இருக்கும் பெண்களுக்கு சம அதிகாரம் வழங்குதல் என்பது இன்றுவரை பேச்சளவிலேயே உள்ளது. நாட்டின் சட்டமியற்றும் அதிகார அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டு மசோதா பாராளுமன்றத்தில் கடந்த 1996ல் தாக்கல் செய்யப்பட்டு 22 ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

பெண்கள் சுயமாக முடிவெடுப்பது இன்றைக்கும் குடும்ப அளவில் கூட கேள்விக்குறியாகவே இருக்கிறது. குடும்பப் பொறுப்பு, குடும்ப கௌரவம் என்ற பெயர்களில் ஆண்களின் அதிகாரத்திற்குள் தான் ஒரு பெண்ணால் செயல்பட முடிகிறது. எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வன் ஒரு மகளிர் தின விழாவில் குறிப்பிட்டது போல இன்றும் வேலைக்குச் செல்லும் பெண்களின் கால்கள் கண்ணுக்குப் புலப்படாத ஒரு சங்கிலியால் வீட்டிலிருந்து பிணைக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். பெண் தான் விரும்பிய துறையை, வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் நூற்றில் ஒரு பெண்ணுக்குத்தான் கிடைக்கிறது.

**பெண்கல்வி**

நமது நாட்டின் விடுதலைக்கு முன்னரே அனைவருக்கும் கல்வி தர வேண்டும் என்ற சிந்தனை தோன்றிவிட்டது. ஆனாலும்

பெண்கள் கல்வி பெறுவது பெரும் கனவாகவும் சவாலாகவும் இருக்கும் நிலை தொடர்கிறது. தற்போதுள்ள நிலை அடைவதற்கே நீண்ட நெடிய போராட்டங்களும் தியாகமும் தேவையாக இருந்தது. பெண்களுக்கான தனிப்பள்ளியை 1848ல் நிறுவி முதல் பெண் ஆசிரியராகவும் திகழ்ந்து பெண் கல்வியில் மிகப் பெறும் சாதனை புரிந்தவர் சாவித்திரிபாய் புலே. பெண்களின் சுயமரியாதைக்கு கல்வி பெறுவது மிகவும் முக்கியம். அதுதான் தற்சார்பைத் தரும் என்ற போதும் கல்வி மட்டுமே சுதந்திரம் தரப் போதுமானதல்ல.

**பெண்கள் மீதான வன்முறை**

நாடு முழுவதும் பெண்கள் மீதான பாலியல் வன்முறை சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் இருப்பது மிகுந்த கவலையளிப்பதுடன் இவற்றின் மீது அரசு எடுக்கும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. சிறு குழந்தை முதல் வயதான மூதாட்டி வரை பெண்களின் மீதான வன்மம் மிகப் பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்து வருகிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுப்பதில் காவல்துறையை ஈடுபடுத்தவே மாதர் அமைப்புகள் பெரும் போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. ஒரு நூற்றாண்டு நீண்ட நெடிய போராட்டங்களுக்குப் பின் பெண்கள் கல்வி கற்கவும், வேலை செய்யவும் வெளியே வந்திருப்பதை நோக்கிய தாக்குதலாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது. மீண்டும் அவர்களை வீடுகளுக்குள் முடக்கும் சூழ்ச்சி இத்தகை வன்முறைக்குப் பின்னே ஒளிந்திருக்கிறது.

பணியிடங்களில் சக ஆண் ஊழியர்களாலும், மேலதிகாரிகளாலும் பெண்கள் மீதான பாலியல் சீண்டல்கள் நடைபெற்றுக் கொண்டே தான் இருக்கின்றன. காவல்துறையில் உயர் அதிகாரியாக இருக்கும் பெண்கள் கூட இத்தகைய வன்முறையிலிருந்து காத்துக் கொள்ள கடுமையாகப் போராட வேண்டியுள்ளதை சமீபத்தில் அத்துறையில் நடந்த நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன. அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறையைத் தடுக்கும் நோக்கில் விசாகா கமிட்டி பரிந்துரைகளின் அடிப்படையிலான குழுக்களை அமைப்பதற்கே சங்க ரீதியாக நிர்வாகங்களை பெருமளவில் நிர்ப்பந்திக்க வேண்டியுள்ளது.

எனவே, பெண்கள் வேலை செய்யும் இடங்களில் அமைப்பாகத் திரள்வதும், அமைப்புசாரா தொழில்களில் ஈடுபடும் பெண்களும், வீட்டுப் பெண்களும், மாணவிகளும் அவரவர் தளங்களில் இயங்கக்கூடிய மாதர் மற்றும் மாணவர் அமைப்புகளில் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் நமக்கெதிரான இத்தகைய வன்முறைகள் குறித்த விழிப்புணர்வைப் பெறவும், தாக்குதலுக்கு உள்ளாகும் போது எதிர்த்துப் போராடவும் தேவையான சக்தியை நாம் பெற முடியும்.

மகளிர் தினம் காட்டும் திசைவழி

சர்வதேச மகளிர் தினம் இன்று பரவலாக அனைத்து அலுவலகங்களிலும், தனியார் நிறுவனங்களிலும், அரசியல் கட்சிகளும் கூட விழாவாகக் கொண்டாடக்கூடிய நிலையில், தொழிற்சங்கமாக நாம் இந்த தினத்தை அனுசரிப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. பெண்களின் வாக்குரிமை, சம ஊதியம், 8 மணி நேர வேலை என்ற கோரிக்கைகளுக்காக தொடங்கப்பட்டு உலகம் முழுக்க அனுசரிக்கப்படும் இந்த தினத்தில் பெண் சுதந்திரமும், பெண்ணின் விடுதலையும் இன்னும் கோரப்படும் விஷயங்களாகவே உள்ளது. முழுமையான பெண் விடுதலை நோக்கிய பயணத்தில் நம்பிக்கையுடன் நமது போராட்டங்களை முன்னெடுக்க இந்த தினம் நமக்கு உந்துசக்தியாக விளங்குகிறது. ●




# தகவல் அறியும் உரிமைச் சட்டம்

## தோற்றமும் - திருத்தமும்

- இரா.மங்களபாண்டியன்

பேச்சுரிமை, எழுத்துரிமை போல தகவல் அறியும் உரிமையும் இந்திய குடிமக்களுக்கு இருக்கிறது என்ற அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தின் பல்வேறு வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் மற்றும் இடதுசாரி கட்சிகளின் வற்புறுத்தலால் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் 15.06.2005-ல் தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. சாமானிய மக்களின் உரிமைகள் நிலைநாட்டப்படுவதும், பாதுகாக்கப்படுவதும் மக்களாட்சி தத்துவத்தின் அடிப்படை ஆகும். மக்களாட்சி சார்ந்த இந்திய குடியரசு மக்களுக்கு சரியான தகவலை ஒழிவுமறைவின்றி வழங்குவது இச்சட்டத்தின் மூலம் சாத்தியமாகியுள்ளது.

ஏறத்தாழ 68 நாடுகளில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும் இந்திய நாட்டில் இயற்றப்பட்ட சட்டமே சிறந்ததாக கருதப்படுகிறது.

1872 ஆம் ஆண்டு சர் ஜேம்ஸ் ஸ்டீபன் என்பவரால் இயற்றப்பட்ட இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 76 இச்சட்டத்தின் அடிப்படை அம்சமாகும்.

ராஜஸ்தான் மாநிலத்தில் உருவான 'மஸ்தூர் கிஷான் சக்தி சங்கதன்" என்ற இயக்கமானது கிராமப்புற மக்களின் நிலம், கூலி, வாழ்வாதரங்களுக்காக போராடும் அமைப்பாகும். இந்த அமைப்பு பஞ்ச நிவாரணப் பணிகளில் நடந்த ஊழல்களுக்கு

எதிராக எடுத்த முயற்சியின் காரணமாக பொது விசாரணை ஒன்று 1994-ல் நடத்தப்பட்டு பாதிக்கப்பட்டவர்களே பொது சாட்சியம் கூறி அரசு அதிகாரிகளின் ஊழல்கள் அம்பலப்படுத்தினர். இந்த விசாரணையில் மக்களுக்கு தேவையான தகவல்கள் குறிப்பாக, அரசின் செயல்பாடுகள், முடிவுகள் பற்றி தகவல்களை பெறுவது மக்கள் அடிப்படை உரிமை என்ற எண்ணம் வேரூன்றியது.

முதன்முறையாக ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் 1995ஆம் ஆண்டு அரசாங்கத்தின் பதிவேடுகளை நகல் எடுப்பதற்கான உரிமையை சட்டமாக்குவதில் இந்தியாவிலேயே ராஜஸ்தான் மாநிலம் முதன்மையானதாக இருக்கும் என சட்டப்பேரவையில் அறிவித்தார். ஆனால் அதன்பின்னர் எந்த ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. ஓர் ஆண்டு கழித்து முதலமைச்சர் அவரது வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறித்தி, தினந்தோறும் 500க்கும் மேற்பட்ட விவசாயிகள், தொழிலாளர்கள் பங்கேற்ற போராட்டம் நடந்தது. இந்த போராட்டத்திற்கு ஏழை, எளிய மக்கள் கோதுமை, காய்கறி, பால் என உணவுப் பொருட்களை கொடுத்தும், பலர் பண உதவி செய்தும் தங்களின் ஆதரவை வெளிப்படுத்தினர். இந்தப் போராட்டத்தின் விளைவாகத்தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம் ஆணை வெளியிடப்படும் என்ற அறிவிப்பை ராஜஸ்தான் அரசு வெளியிட்டது.

பின்பு அகில இந்திய அளவில் பல்வேறு இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள் இணைந்து தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை நாடு முழுமைக்கும் உருவாக்க குரல் கொடுத்தன. இந்நிலையில், 2005ல் இடதுசாரிகளின் தயவால் ஆட்சி என்ற நிலை ஏற்பட்டபோது இடது சாரிகளின் நிர்பந்தத்தால் 'தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005'' வந்தது.

இதில் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள திருத்தம் என்பது 'முதன்மைத் தகவல் ஆணையர் மற்றும் மாநிலங்களின் தகவல் ஆணையர்களின் பணிக்காலம் மற்றும் ஊதியம் ஆகியவற்றை தீர்மானிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே உண்டு'' என வரையறுத்துள்ளது.

ஏற்கனவே முதன்மை தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர்களின் பணி மற்றும் ஊதியம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்டதாகும். முதன்மைத் தகவல் ஆணையரின் பணிக்காலம் 5 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை. இவற்றில் எது முந்தையதோ அதுவரை பணியில் இருக்கலாம். ஆனால் தற்போது மத்திய அரசு திருப்தியடையும் வரை முதன்மை தகவல் ஆணையர் மற்றும் மாநில தகவல் ஆணையர்களின் சம்பளம், பதவிக்காலம் நீட்டிக்கப்படும் என்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இதனால் சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும், நேர்மையாகவும் முதன்மை தகவல் ஆணையர் மற்றும் மாநில தகவல் ஆணையர் செயல்படுவது கேள்விக்குறியாகி உள்ளது. மத்திய அரசுக்கு சாதகமாக செயல்பட்டால் பணி நீட்டிப்பு கிடைக்கும் என்ற நிலையும் உருவாகி உள்ளது.

ஏற்கனவே, குறித்த காலக்கெடுவிற்குள் (30 நாட்களுக்குள்) தகவல்கள் வழங்கப்படுவது கிடையாது. மேலும் முதல் மேல்முறையீட்டு மனுவும் சரிவர கையாண்டு தகவல்கள் வழங்கப்படுவதில்லை. தலைமை தகவல் ஆணையர்களுக்கு இரண்டாம் மேல் முறையீடு அளிக்கும் பட்சத்தில்தான் ஓரளவுக்கு அரசு அதிகாரிகளிடமிருந்து தகவல்களை பெற முடிகிறது.

எனவே இச்சட்டத்தினை வலுப்படுத்தவேண்டும். குறிப்பாக தகவல் கோரும் நபர்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது. எனவே, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொதுவான கருத்து அழுத்தமாக மேலோங்கும் இந்த சூழலில்தான் மத்திய அரசு கொண்டு வந்த திருத்தம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை பலவீனப்படுத்தக்கூடிய ஒன்றாக உள்ளது.

●

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
( பதிவு எண்: 237/84 )

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண்.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005

28441286 / 28440938 / 28443601 e-mail: tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

| | | |
|---|---|---|
| மாநிலத் தலைவர் | | பொதுச் செயலாளர் |
| **மு.அன்பரசு** | | **ஆ.செல்வம்** |
| மாநில துணைத் தலைவர்கள் | மாநிலப் பொருளாளர் | மாநிலச் செயலாளர்கள் |
| **மொ.ஞானத்தம்பி** | **மு.பாஸ்கரன்** | **சா.டானியல் ஜெயசிங்** |
| **ஆ.பெரியசாமி** | துணை பொதுச்செயலாளர்கள் | **உ.சுமதி** |
| **கோ.பழனியம்மாள்** | **இரா.மங்களபாண்டியன்** | **ச.ஹேமலதா** |
| **சி.எஸ்.கிறிஸ்டோபர்** | **என்.வெங்கடேசன்** | **ஆ.அம்சராஜ்** |
| **சி.பரமேஸ்வரி** | **மு.சீனிவாசன்** | **சா.கோதண்டபாணி** |
| **மு.செல்வராணி** | **தெ.வாசுகி** | **அ.குபேரன்** |


கடித எண்..26/2022 நாள்..21.02.2022

பெறுநர்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**
தலைமைச் செயலகம்,
சென்னை-600009

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்.

பொருள் : அரசு ஊழியர் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை (NIHS) 01.07.2021 முதல் புதுப்பித்து அரசாணை வெளியிட்டுள்ளது - குறைபாடுகளை களைய வேண்டுதல் -தொடர்பாக

பார்வை :
1. அரசாணை எண்.57, நிதித்துறை, நாள்.26.02.2021
2. அரசாணை எண்.160, நிதித்துறை, நாள்.29.06.2021
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை கடித எண்.41008எ, பென்சன்/2020-3, நாள்.12.07.2021
4. ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை கடித எண். 34074/புமகதி1/2021, நாள்.05.10.2021

---

பார்வையில் கண்ட அரசாணைகளின்படி தமிழ்நாட்டில் உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பயன் பெறும் வகையில் புதிய மருத்துவக் காப்பீடு திட்டம் அமல்படுத்தப்பட்டு ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தம் போடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஜூலை 2021 முதல் ஒவ்வொரு மாதமும் ரூ.180லிருந்து ரூ.300 ஆக உயர்த்தி ஒவ்வொரு அரசு ஊழியர், ஆசிரியர்களிடமும் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது.

இக்காப்பீட்டின் நோக்கம் மாத ஊதியம் பெறும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் திடீரென ஏற்படும் நோய்களுக்கு மருத்துவ செலவை திரும்ப பெறுவதற்கான அரசின் மிக சிறந்த திட்டமாக இருக்கிறது.

..2..

இருப்பினும் இத்திட்டத்தினை அரசே ஏற்று நடத்திட வேண்டுமென எங்கள் சங்கம் தொடர்ந்து அரசிடம் கோரிக்கை வைத்து வருகிறோம் என்பதையும் தங்களின் கனிவான பார்வைக்கு கொண்டு வருகிறோம்.

ஆனால் தமிழக அரசின் உயர்ந்த நோக்கத்தை சீர்குலைக்கும் விதமாக தனியார் மருத்துவமனைகள் அரசாணையை முழுமையாக ஏற்று அமல்படுத்தப்படுவதில்லை. உதாரணமாக பணமில்லா சிகிச்சை என்பதை உத்திரவாதப்படுத்தப்படவேண்டும். பணம் கட்டினால் மட்டுமே சிகிச்சை என்பது பரவலாக தனியார் மருத்துவமனைகள் கொள்கையாகவே கடைபிடித்து வருகிறது.

இவ்வாறு, மிக ஆபத்தான சூழ்நிலையில் தனியார் மருத்துவனைக்கு செல்லும் அரசு ஊழியர்களின் நிலைமையை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் தனியார் மருத்துவமனை நிர்வாகங்கள் முடிந்தவரை பணம் கைப்பற்றும் நோக்கத்திலேயே செயல்பட்டு வருகிறது.

மேலும், வேறு வழியின்றி நோய்வாய்ப்பட்ட ஊழியர்களின் குடும்பத்தினர் அக்கம் பக்கத்தில் கடன் பெற்று உயிரை காப்பாற்றினால் போதும் என்ற நிலையில் பணத்தை செலுத்திவிடுகின்றனர். அதுபோல் ஒவ்வொரு நோய்களுக்கு ஏற்றவாறு பேக்கேஜ் எனும் வார்த்தையைப் பயன்படுத்தி பணத்தை கைப்பற்றவே தனியார் மருத்துவமனைகள் முயல்கின்றனர்.

தமிழகம் முழுவதும் இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. இப்பிரச்சினையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடர்ந்து, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் ஊழியர்களுக்காக மருத்துவமனைகளில் தலையிட்டு வருகிறது.

இது ஒருபுறம் என்றால் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம், இத்திட்டத்தை உள் ஒப்பந்தத்தின்படி தனியார் நிறுவனமான "MD India" மற்றும் "MEDI ASST" என்ற நிறுவனங்கள் இணைந்து தமிழகத்தை இரண்டாகப் பிரித்து இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. ஊழியர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து முதற்கட்ட ஒப்புதல் பெறுவதற்கே பெரும் போராட்டம் நடத்த வேண்டியுள்ளது.

மேலும் குறிப்பிட்ட சிகிச்சைக்ளுக்கு குறிப்பிட்ட அளவு பணம்தான் ஒப்புதல் அளிக்கப்படும் என மேற்கண்ட தனியார் நிறுவனம் கூறிவிடுகின்றன. இது மொத்த சிகிச்சை தொகையில் தற்போது சில மாதங்களாக 50% முதல் 60% பெறுவதே பெரும் சிரமமாகவும், போராட்டமாகவும் உள்ளது. அதுவும் சங்கத்தின் கவனத்திற்கு வரும்போது ஒரு சில அரசு ஊழியர்களுக்கு மட்டுமே 70% வரை கடும் போராட்டத்திற்கு பிறகு சிகிச்சை பெறும் நோயாளிகளை 2 நாள் முதல் 3 நாள் மருததுவமனையில் தங்கச் செய்து சிகிச்சைக்கான பணம் பெற வேண்டியுள்ளது. எனவே, தமிழக அரசு இவ்விஷயத்தில் உடனே தலையிட்டு பணமில்லா சிகிச்சைக்கான அரசாணையை அமல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் கடந்த 2020 முதல் கோவிட்-19 பெருந்தொற்று ஏற்பட்டதிலிருந்து இத்திட்டத்தில் கோவிட்-19ஐ தமிழக அரசு சேர்த்துள்ளது. ஆனால் இரண்டு ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் இந்த பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனை சிகிச்சை முடிந்து சிகிச்சைக்கான தொகை இதுநாள் வரை மீள பெறவில்லை. பல கோடி ரூபாய் காப்பீடு நிறுவனம் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு விடுவிக்காமல் இருப்பதால் ஊழியர்கள் சிகிச்சை பெறுவதில் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601




அதேபோல் அரசு ஊழியர்கள் கோவிட்-19 பெருந்தொற்றுக்கு சிகிச்சை பார்த்த தனியார் மருத்துவமனைகளுக்கும் சிகிச்சைக்கான தொகை தமிழக அரசு விடுவிக்கப்படவில்லை. இதனால் தனியார் மருத்துவமனைகள் கோவிட்-19 பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்க மறுத்து வருகிறன்றனர்.

சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகள் இத்திட்டத்தின் கீழ் இல்லாத நிலையில் சிகிச்சை முடிந்து சிகிச்சை தொகை மீளப்பெற (Re-imbursement) உரிய விதிமுறைகளின்படி அந்தந்த மாவட்டத்தின் இணை இயக்குநர் (மருததுவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மூலமாக மருத்துவ நலப்பணிகள் இயக்குநரத்திற்கு அனுப்பி வந்த நிலையில் பல மாதங்களாக தொகை வழங்காமல் இருந்தது. தற்போது சம்பந்தப்பட்ட மாவட்டத்திலேயே அந்த தொகை ஒப்புதல் அளிக்க அனைத்து விண்ணப்பங்களையும் தற்பொழுது பார்வை-4ல் கண்ட கடிதத்தில் கருவூலத்துறை ஆணையர் ஏற்னவே அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கோவிட்-19 சிகிச்சைக்கான முறையாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட அளவிலான குறை தீர்க்கும் குழுவில் நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு திருப்பி அனுப்பபட்டு வருகிறது. இதனால் மேலும்மேலும் தாமதம் நீட்டிக்கவே செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். சிகிச்சைத்தொகை மீளப்பெற குறிப்பிட்ட காலக்கெடுவை நிர்ணயித்து ஊழியர்கள் பயன்பெற நடவடிக்கை எடுத்திடுமாறும், அரசு ஆணையின்படி பணமில்லா சிகிச்சையை உத்திரவாதப்படுத்திடவும், சிகிச்சைக்கான பேக்கேஜ் முறை ரத்து செய்து, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் முழுத்தொகையும் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள

**(மு. அன்பரசு)**
மாநிலத் தலைவர்
98401 - 87508

**(ஆ.செல்வம்)**
பொதுச் செயலாளர்
94439 - 30500

நகல்

1. **மாண்புமிகு நிதி, மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்**
   தலைமைச் செயலகம், சென்னை-600009

2. **மாண்புமிகு மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்**
   தலைமைச் செயலகம்,சென்னை-600009

3. **அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
   நிதித்துறை, தமிழ்நாடு அரசு,
   தலைமைச் செயலகம்,சென்னை-600009

4. **அரசு முதன்மைச் செயலாளர்**
   மருத்துவம்,மக்கள் நல்வாழ்வுத்துறை, தமிழ்நாடு அரசு,
   தலைமைச் செயலகம்,சென்னை-600009

5. **ஆணையாளர்,**
   கருவூலம் மற்றும் கணக்குத்துறை, நந்தனம், சென்னை-600035

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

(பதிவு எண்: 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண்.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005

28441286 / 28440938 / 28443601 e-mail: tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

| | | |
|---|---|---|
| மாநிலத் தலைவர் | | பொதுச் செயலாளர் |
| **மு.அன்பரசு** | | **ஆ.செல்வம்** |
| மாநில துணைத் தலைவர்கள் | மாநிலப் பொருளாளர் | மாநிலச் செயலாளர்கள் |
| **மொ.ஞானத்தம்பி** | **மு.பாஸ்கரன்** | **சா.டானியல் ஜெயசிங்** |
| **ஆ.பெரியசாமி** | துணை பொதுச்செயலாளர்கள் | **உ.சுமதி** |
| **கோ.பழனியம்மாள்** | **இரா.மங்களபாண்டியன்** | **ச.ஹேமலதா** |
| **சி.எஸ்.கிறிஸ்டோபர்** | **என்.வெங்கடேசன்** | **ஆ.அம்சராஜ்** |
| **சி.பரமேஸ்வரி** | **மு.சீனிவாசன்** | **சா.கோதண்டபாணி** |
| **மு.செல்வராணி** | **தெ.வாசுகி** | **அ.குபேரன்** |

கடித எண்..28/2022 நாள்..01.03.2022

பெறுநர்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**
தலைமைச் செயலகம்,
சென்னை-600009

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்.

பொருள் : அரசு ஊழியர், ஆசிரியர்களின் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுதல் – தொடர்பாக

---

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் தொடர்ந்து ஊழியர்களின் உரிமைகளுக்காக போராடி வருகிற இயக்கமாகும், அரசு நலத் திட்டங்கள் மற்றும் தமிழகத்தில் எற்படும் இயற்கை சீற்றங்களின்போது அரசுக்கு அச்சாணியாக களத்தில் நின்று பணியாற்றும் நாங்கள் மழை வெள்ளம், புயல், சுனாமி, கொரோனா பெருந்தொற்று போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்பட்ட போது தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டங்களில் களத்திற்கு சென்று மக்களுக்கான உதவிகளை செய்பவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள். அதுமட்டுமல்ல **"மக்களை நோக்கி பயணம்"** என்ற இலட்சிய நோக்கத்தோடு தமிழகத்தில் படித்த இளைஞர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்பு, மருதுதவ முகாம், கண்தானம், உடல்தானம், கிராமங்களை தத்து எடுப்பது போன்ற சமூகப் பணிகளை செய்து கொண்டு இருக்கிறோம் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்கு கொண்டு வருகின்றோம்.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**Tamilnadu Government Employees' Association**

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


..2..

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் போராடிப் பெற்ற பல்வேறு உரிமைகள் கடந்த 10 ஆண்டு அதிமுக ஆட்சிக் காலத்தில் பறிக்கப்பட்டன. அந்த கோபம் அகலாத நிலையில் சட்டமன்ற தேர்தலில் கடந்த அரசாங்கம் வீழ்த்தப்பட்டுவிட்டது. மக்களின் பேராதரவோடும், அரசு ஊழியர்களின் பெரும் முயற்சியினாலும் இடைவிடாத ஊழியர் பிரச்சாரங்களினாலும் தங்களது தலைமையில் திமுக அரசு பொறுப்பு ஏற்றுள்ளது. இந்தியாவிலேயே மக்கள் சேவையிலும், கொரோனாவில் மக்களை பாதுகாத்ததிலும் சிறப்பான மாநிலமாக தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாடே அறிந்துள்ளது. அரசு ஊழியர்களும் தங்களது கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருவீர்கள் என்ற எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள். அதற்கு தகுந்தாற்போல் கடந்த இரண்டு ஆண்டுகளாக முடக்கப்பட்ட அகவிலைப்படியை 2021 டிசம்பர் 28ம் தேதியே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தது மிகுந்த நம்பிக்கையை அரசு ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

2021 டிசம்பர் 18,19ஆம் தேதிகளில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாடு சென்னையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு அரசு ஊழியர், ஆசிரியர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் தங்களது தலைமையிலான அரசு சொன்ன வாக்குறுதியை அனைத்தையும் நிறைவேற்றித் தரும் என்ற நம்பிக்கை அளித்ததோடு அல்லாமல் அரசு ஊழியர்கள் இல்லை என்றால் அரசாங்கம் இல்லை. அரசு ஊழியர்கள் தான் அரசாங்கத்தை நடத்தக்கூடியவர்கள் என்று கூறி நான் உங்களுடன் இருக்கிறேன் என்று நம்பிக்கையூட்டி மிகச் சிறந்த உரையாற்றினார்.

மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலந்து கொண்ட 14ஆம் மாநில மாநாட்டில் 100க்கு மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு , அந்த தீர்மானங்கள் கோரிக்கைகளாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் பல்வேறு துறைவாரியான கோரிக்கைகளும் உள்ளடக்கி உள்ளது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**அதில் பிரதான கோரிக்கையான புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்திட வேண்டும்.**

27.01.2021ம் தேதி மதுரையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாட்டிலும், திமுகவின் தேர்தல் அறிக்கையிலும் கழக அரசு ஆட்சிக்கு வந்தால் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து அனைவருக்கும் பயனளிக்கும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உறுதி அளித்தார். இன்னும் நம்பிக்கையோடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இருக்கிறோம். இதன் மூலம் லட்சக்கணக்கான புதிய ஓய்வூதியத் திட்டத்திலுள்ள அரசு ஊழியர்களின் வாழ்வில் ஒளி ஏற்ற வேண்டுமென மாண்புமிகு

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

..3..

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களையும், தமிழக அரசையும் கேட்டுக்கொள்கிறோம். **சமீபத்தில் ராஜஸ்தான் மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிப்பு செய்திருப்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் கனிவான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.**

திராவிட முன்னேற்ற கழகத்தை பொறுத்தவரை ஏனோதானோ என்று வாக்குறுதிகளை அள்ளி விடும் கட்சியாக நாங்கள் பார்க்கவில்லை. மாண்புமிகு முதல்வரே நீங்கள் உங்களால் முடியும் என்று நம்புவதைதான் சொல்வீர்கள். சொன்னதைத் தவறாமல் செய்வீர்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை தமிழக அரசுத் துறையில் பணிபுரியும் ஒவ்வொரு அரசு ஊழியருக்கும் உள்ளது. அதேபோல் தமிழக மக்களிடமும் உள்ளது. அதனால் தான் நகர்புற உள்ளாட்சி தேர்தலில் மீண்டும் தமிழக மக்களின் மிகப்பெரிய நம்பிக்கையை பெற்றுள்ளீர்கள். நீங்கள் சொல்வதை செய்யும் முதல்வராகவே இருக்கிறீர்கள். அப்படியே இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

தமிழக அரசு நிறைவேற்ற உள்ள 2022-2023ஆம் ஆண்டு நிதி-நிலை அறிக்கையில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உள்ளிட்ட கோரிக்கைகளுக்கான தீர்வை ஏற்படுத்திதரும் பட்ஜெட்டாக இருக்கும் என்ற நம்பிக்கையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இருக்கிறோம் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் கவனத்தில் கொண்டு எங்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டுமென கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

| | |
|---|---|
| **( மு. அன்பரசு )** | **( ஆ.செல்வம் )** |
| மாநிலத் தலைவர் | பொதுச் செயலாளர் |
| 98401 – 87508 | 94439 – 30500 |

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com